# 8. இறைக் கொள்கையும் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளும்

## 8.1. பொது நோக்கும் கொள்கை உபாயமும்

வலுவான இறை உறுதிப்பாட்டினை நோக்கி மேலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1997 இன் வரவு செலவுத்திட்ட கொள்கைகள் உருவாக்கப்பட்டன. தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியான உறுதியான கடப்பாட்டுடன் இறை முகாமையில் ஏற்கனவே காணப்படும் நலிவுகளை சரிப்படுத்தும் வேளையில் இறைப் பற்றாக்குறையினை குறைவடையச் செய்வதற்கு 1997 இல் முக்கிய வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி அரச கணக்குகளை தவறற்றதாக்குதல், வரவு செலவு திட்டத்திற்கு வெளியிலான கொடுக்கல் வாங்கல்களை நியாயப்படுத்தல், நிதியியல் கட்டுப்பாடுகளையும் வகைகூறலையும் பலப்படுத்துதல், வருமானங்களை அதிகரித்தல், விரயம் மிகுந்த செலவுகளை குறைத்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் சமூக செலவுகளை உறுதியான மட்டத்தில் பேணல் என்பன எதிர்பார்க்கப்பட்டன. வரவு செலவு திட்டப் பற்றாக்குறை பணவீக்கமல்லா மூலகங்களினூடாக நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 1997 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. செலவின் வளர்ச்சி கட்டுப்படுத்தப் படுவதுடன் தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாண்டுக்கு இலக்கிடப்பட்டதற்கும் கீழாக திரண்ட இறைப் பற்றாக்குறையினை குறைவடையச் செய்தமையானது மத்திய வங்கிக்கான அரச படுகடனில் பாரிய குறைப்பொன்றினை ஏற்படுத்தி வங்கித்தொழில் முறைக்கான படுகடனில் தேறிய குறைப்பொன்றினை இயலச்செய்தது. 1997 இல் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கையான நாணய கொள்கைகளுடன் இணைந்ததாக இச்சாதனைகள் கிழக்காசிய நிதி நெருக்கடிகளினால் தூண்டப்பட்ட மிகவும் உறுதியற்ற வெளிநாட்டுச் சூழலொன்றில் சார்பளவில் உறுதியான உள்நாட்டு நிதிச் சந்தையினை பேணுவதற்கு உதவின. இச்சாதனைகளை மேலும் பலப்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நோக்குடன் ஒப்பீட்டளவில் சாதகமான பேரண்டப் பொருளாதார சூழலொன்றில் 1998 இன் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

மொத்த வரவு செலவு திட்டப் பற்றாக்குறை (கொடைகளுக்கு முன்) மொ. உ. உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்கு குறைவடையச் செய்யப்பட்டதுடன் 1996 இன் 7.8 சதவீத பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதப் புள்ளி குறைப்பாகவும் காணப்பட்டது. ஆரம்ப வரவு செலவு திட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 1997 இல் மொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியின் 1.6 சதவீதத்திற்கு தாழ்வடைந்து காணப்பட்டது. இந்த மேம்பாடானது தனியார் மயமாக்கலிருந்தான பணப்பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க கூடுதலாக அமைந்தமை (ரூ. 22,535 மில்லியன்) வரியல்லாத வருமானங்களின் மேம்பட்ட சேகரிப்பு, வினைத்திறமையற்றதும் விரயம்மிக்கதுமான செலவினங்கள் மற்றும் குறைநிரப்பு செலவு என்பன மீதான கண்டிப்பான கட்டுப்பாட்டுடனான மேம்பட்ட காசு முகாமைத்துவம், உயர் செலவு கொண்ட படுகடன் தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட சேமிப்பு என்பனவற்றின் விளைவினால் ஏற்பட்டதாகும். பன்னாட்டு விலைப் போக்குகளிற்கு இணங்க கோதுமை மாவின் விலைகளை கிலோ கிறாமொன்றிற்கு ரூ. 16.95 இலிருந்து ரூ. 18.95 இற்கு 12 சதவீதத்தினால் மேல்நோக்கி சீராக்கியமை, வளமாக்கி மானியம் குறைக்கப்பட்டமையும், குறை வருமான வேளாண்மையாளர்களை அது இலக்காக கொண்டமை என்பனவும் 1997 இல் மீண்டெழும் செலவினத்தின் வளர்ச்சியினை கட்டுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தன. இதற்குமேல் குறிப்பாக துறைமுக அபிவிரு த்தி, மின்வலு மற்றும் தொலை தொடர்பூட்டல் என்பனவற்றிலான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தாமதங்கள் மூலதனச் செலவில் வீழ்ச்சியினை விளைவித்து வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டின் பாதிப்பினை ஏற்படுத்தின.

பற்றாக்குறையை நிதியிடுவதற்காக உள்நாட்டு மூலவளங்களுக்கான அரசின் கேள்வி 1997 இல் கணிசமாக குறைக்கப்பட்டு வெளிச் செலுத்தும் தாக்கமும் குறைவடைந்து மாறுபடு வீதப் பத்திரங்களின் வழங்கலிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர்கள் 50 மில்லியன் தொகை கொண்ட பணப் பெறுகைகளையும் உட்கட்டமைப்பு செலவினங்களை ஈடுசெய்வதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்தது. உயர் செலவு கொண்ட பொதுப் படுகடனை கொடுத்துத் தீர்ப்பதற்காக தனியார் மயமாக்கலில் பணப் பெறுகைகள் பயன்படுத்தப் பட்டமை மற்றும் திறைசேரி உண்டியல்களின்

நியதி உச்ச மட்டத்தினை ரூ. 125 பில்லியனிலிருந்து ரூ. 115 பில்லியனிற்கு குறைப்பதற்கான கடப்பாடுகள் என்பன இறைக் கொள்கையின் நம்பகத் தன்மையினை உயர்வடையச் செய்துள்ளன. தனியார் மயமாக்கலில் மேலும் முன்னேற்றத்தை அடையச் செய்தல், அத்தகைய தனியார் மயமாக்கல் பெறுகைகளை பொதுப் படுகடன்களை மேலும் கொடுத்துத் தீர்ப்பதற்காக பயன்படுத்துதல் என்பனவற்றை 1998 இன் வரவு செலவுத் திட்டம் எதிர்பார்ப்பாகக் கொண்டுள்ளது. படுகடன்களின் தீர்ப்பனவுகளை பிரதிபலிக்கும் வகையில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1996 இறுதியில் ரூ. 17,100 மில்லியனிலிருந்து 1997 இறுதியில் ரூ. 7,222 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. தனியார் மயமாக்கல் பணப் பெறுகைகளின் பகுதியொன்றும் மத்திய வங்கியுடனான சிறப்பு வைப்பில் வைப்பிலிடப்படடது. இதன் விளைவாக மத்திய வங்கியிடமிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 13,991 மில்லியனால் குறைவடைந்தது. எனினும் நியதி ஒதுக்குத் தேவை குறைக்கப்பட்டதனை தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் அதிகரித்தமையினால் முழு வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 2,172 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இதற்கும் மேலாக, அரசின் நிருவாக ரீதியான கடன்பாடுகளின் இருப்பு 1997 இல் ரூ. 6,654 மில்லியனால் குறைவடையச் செய்யப்பட்டது. 1998 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் மொத்தப் பற்றாக் குறையை மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதத்துக்கு (தனியார் மயமாக்கல் நீங்கலாக) இலக்கிட்டுக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டளவில் இப்பற்றாக் குறையை மொ.உ.உ. இன் 4 சதவீதத்துக்கு குறைவடையச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலகுவான, பரந்துபட்ட மற்றும் மிகத்தெளிவான வரி அமைப்பொன்றினை குறிக்கோளாகக் கொண்ட வரிக்கொள்கைச் சீரமைப்புக்களை அரசுதொடர்ந்து செயற்படுத்தியது. மேம்பட்ட வரி செலுத்துகை மற்றும் வரி நிருவாகம் என்பனவற்றினூடாக முதலீடுகளை ஊக்குவித்து தளத்தினை பரவலடையச் செய்யும் நோக்கில் வருமான வரி அமைப்பில் தொடர்ந்து சீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தொழில் சாராத வருமானத்திற்கு ரூபா 100,000 இனையும் தொழிலிலிருந்தான வருமானத்திற்கு ரூ. 144,000 இனையும் அடிமட்டமாக்க கொண்ட நேர்த்தியற்ற இரட்டை முறையானது அனைத்து வரி செலுத்துவோருக்கும் ரூ. 144,000 இனை வரி அடிமட்டமாகக் கொண்ட சீரானவொரு முறையினால் பிரதியீடு செய்யப்பட்டது. சலுகையடிப்படையிலான வீதங்களுக்கு உரித்துடைய தாழ்வான வரிக்குரிய வருமான மட்டம் ரூ. 35,000 இலிருந்து ரூபா 100,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. தனியான வருமான வரி செலுத்துவோருக்கு கணிசமாக நிவாரணமளிக்கும் வகையில் இது அதியுயர் மிகை வரி வீதத்திற்கான ஆண்டு வருமான மட்டத்தினை தொழில் சாராத வருமானம் உழைப்போருக்கு ரூ. 205,000 இலிருந்தும் தொழிலிலிருந்து வருமானம் உழைப்போருக்கு ரூ. 249,000 இலிருந்தும் இவ்விரு வகைகளுக்கும் ரூ. 444,000 இற்கும் மேலாக நகர்வடையச் செய்தது. வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரியும் 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. வர்த்தக ரீதியாக தொழிற்படும் அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பானது 1993 இலிருந்து தொடர்புடைய நிறுவனங்களினால் செலுத்தப்பட்டு வந்த போதிலும் அவ்வரிப் பொறுப்பு மீண்டும் ஊழியர்களின் மீது சுமத்தப்பட்டது. இளைப்பாறுவோருக்கான இறுதி நன்மையின் சலுகையடிப்படையிலான வீதங்க ளுக்கு ஏற்புடையதான உச்ச வரையறையினை ரூ. 1.5 மில்லியனிலிருந்து ரூ. 1.8 மில்லியனிற்கு உயர்த்துவதன் மூலம் வரிப்பிரிவும் விரிவாக்கப்பட்டது. இதற்கும் மேலதிகமாக உழைக்கும் போதே செலுத்தும் வரிகளையும் வருமானவரி நிலுவைகளையும் சேகரிப்பதற்காக வரி நிருவாகமும் மேம்படுத்தப்பட்டது. வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக கூட்டு முயற்சிகளின் பங்கு மூலதன வருமானம் மீதான வரி தளர்த்தல்களும் வழங்கப்பட்டன. உயர் தொழினுட்ப செயற்றிட்டங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு வரி விடுப்புக்களும் வழங்கப்பட்டன.

பொருட்கள் பணிகள் வரியினை நோக்கிய சுமுகமான மாற்றமொன்றிற்கு வசதியளிப்பதற்காக விற்பனை வரி அமைப்பு திருத்தியமைக்கப்பட்டது. பொருட்கள் பணிகள் வரி 12.5 சதவீத மிதமான தனி வீதமொன்றாக அமையவிருப்பதனால் பொருட்கள் பணிகள் வரியின் அறிமுகத்தினைத் தொடர்ந்து கணிசமான விலை மாற்றங்கள் ஏற்படுத்துவதனைத் தவிர்க்கும் பொருட்டு 6 சதவீத, 10 சதவீத வரிவீத படிகள் முறையே 8 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் படிப்படியாக மேல்நோக்கி உயர்த்தப்பட்டன. டீசல், மண்ணெண்ணெய் ஆகிய பெற்றோலியப் பொருட்களுக்கு மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வேளையில் வருமான இழப்பினை தடுப்பதற்காக

டீசல் மீதான உற்பத்தி வரி மேல்நோக்கி சீராக்கப்பட்டது. அனைத்து வகை வெறியக் குடிவகை மற்றும் பயணிகள் ஊர்திகள் என்பனவற்றிற்கு முறையே 10 சதவீத, 5 சதவீத வரியினை விதிப்பதினூடாக அவை உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

மூலதனம் மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான வரி மற்றும் தீர்வைச் சலுகைகள் என்பனவற்றின் மூலம் ஊக்குவிப்புக்களின் உள்ளடக்கத்தினை ஏற்றுமதித் துறைக்கு விரிவாக்கும் பொருட்டு வரிச் சலுகைக ளுக்கு தகுதி பெறுவதற்காக நிறுவனமொன்றினால் மொத்த உற்பத்தியில் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய விகிதாசாரம் குறைவடையச் செய்யப்பட்டது. முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக உயர்ந்த முதலீட்டு வரிச் சலுகை, பொறி இயந்திரம், கருவிகள் என்பனவற்றின் மீதான துரிதப்படுத்தப் பட்ட பெறுமானத் தேய்வுச் சலுகை, 2 சதவீதத்தி லிருந்து 0.5 சதவீதத்திற்கான இயந்திரம் மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான தேசிய பாதுகாப்பு தீர்வையின் குறைப்பு என்பன வழங்கப்பட்டன. மூலதனம் மற்றும் பங்குச் சந்தை அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் விலை குறிப்பீடு செய்யப்பட்ட பங்கு கொடுக்கல் வாங்கல்கள் மீதான முத்திரை தீர்வை இல்லாதொழிக்கப்பட்டு விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட பொதுக் கம்பனிக ளினால் பகிரப்பட்ட பங்கிலாபங்களின் மீது முழுமையான குறித்துக் காட்டப்பட்ட நன்மைகள் வழங்கப்பட்டதோடு குத்தகை சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு படிகளை குத்தகை வருமான த்திற்கு எதிராக எதிரீடு செய்வதற்கு முதலீட்டாளா கள் அனுமதிக்கப்பட்டார்கள். பின்தங்கிய பிரதேசங் களில் உயர் தொழிநுட்ப செயற்றிட்டங்கள், கணனித் தொழினுட்பம் மற்றும் உழைப்புச் செறிவுள்ள செயற்றிட்டங்கள் ஆகிய முன்னுரிமை துறைகளில் முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக குறித்துரைக்கப் பட்ட துறைகளுக்கான வரிச் சலுகைத் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தோற்றும் பெற்றுவரும் பன்னாட்டு சூழலுக்கு ஏற்ப கைத்தொழில் மயமாக்கல் உபாயத்தினை நியாயப்படுத்துவதற்கென தீர்வை சீராக்கங்கள் குறித்து விதந்துரைப்புக்களை செய்வதற்காக சனாதி பதி தீர்வை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. உள்நாட்டு விலை அதிகரிப்புக்களை கட்டுப்படுத்து வதற்கு உதவுவதற்காக பெற்றோலிய உற்பத்திகளின் மீதான தீர்வை 10 சதவீதப்புள்ளியினால் பகுதியளவில் தளர்த்தப்பட்டது. உள்நாட்டு விலைகள் அதிகரித்ததன் காரணமாக சீனி, அரிசி, உருளைக் கிழங்கு, சின்ன வெங்காயம் ஆகிய சில நுகர்வு பொருட்களின் மீது முழுமையான மற்றும் பகுதியளவில் தீர்வை தளர்த்தல்கள் வழங்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட ஊர்திகளின் மீது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய பெறுமானத்தேய்வு க.ஏ. பெறுமானத்தின் 90 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. பலதரப்பட்ட சுங்கத் தீர்வை விலக்களிப்புக்கள் தவறாக பயன்படுத்தப்பட்மையினால் அவ்வாறான தவறான பயன்படுத்தல் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் 3 மாத திறைசேரி உண்டியல் வீதத்திற்கு சமமான தீர்வை விதிப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

வரிகளை இலகுபடுத்துவதற்காக பலதரப் பட்ட பத்திரங்களுக்கான முத்திரைத் தீர்வைகள் 2 சதவீதத்தில் ஒருமுகப்படுத்தப்பட்டது. டீசல் ஊர்திகள் மீதான இரட்டை தீர்வை வரி ஆண்டொன் றுக்கு ரூ. 5,000 ஆக ஒருங்கிணைக்கப்பட்டது. நிதிக் கருவிகள் மீதான மொத்த விற்பனை வரியும் 2 சதவீதத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது.

பயன்படுத்துநரே செலுத்தல் கோட்பாட்டின் அடிப்படையில் நிர்வாகக் கட்டணங்களும் அறவீடு களும் மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டன. அஞ்சல் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு இலவச அஞ்சல் பணிகள் அரச நிறுவனங்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்டுப்படுத்தப் பட்டன. பெருமளவு தொழிற்பாட்டு இழப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் அஞ்சல் அலுவலங்களுக்கு கருமமற்ற நாட்களாக பிரகடனப்படுத்தப்பட்டு ள்ளது. தனியார் மயமாக்கப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு பணவீக்கத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட குத்தகையொன்று அறிமுகப்படுத்தப் பட்டதுடன் வர்த்தக ரீதியாக தொழிற்படும் ஆற்றல் கொண்ட அரச தொழில் முயற்சிகளின் மீது ஏற்புடைய வரித்தீர்வைகள் விதிக்கப்பட்டன. இத்துடன் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டத்தில் ஊழியர்களினது பங்கேற்பினை அதிகரிப்பதற்காக ஊழியர்களின் சமூக பாதுகாப்பு பங்களிப்புக்கள் வீதம் 1 சதவீதப் புள்ளியினால் அதிகரிக்கப்பட்டது.

செலவுப் பக்கத்தில் நலம் மற்றும் தேசிய பாதுகாப்பு மீதான செலவினம் தவிர்ந்த பயணம், எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் ஏனைய அலுவலக கருவிகள், போக்குவரத்து, தொடர்பூட்டல் வசதிகள் மற்றும் ஏனைய வழங்கல்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களிலான

உற்பத்தியாக்கமற்ற அல்லது குறைந்த உற்பத்தி யாக்கமுள்ள செலவினம் 20 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது. அரச நிறுவனங்களின் ஊர்திகள் கொள்வனவிற்கான ஏற்பாடு முடக்கிவிடப்பட்டது. மத்திய வங்கியினால் உடைமையாக வைத்திருக்கப் பட்ட ரூ. 10,000 மில்லியன் திறைசேரி உண்டியல்கள் மற்றும் இரு அரச வங்கிகளுக்கான ஏனைய படு கடன்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உயர்செலவு கொண்ட பொதுப்படுகடன் தீர்ப்பனவு செய்யப் பட்டதனைத் தொடர்ந்து படுகடன் தோற்றப்பாடு மேம்பாடடைந்தது. கோதுமை மாவின் விலை மேல்நோக்கி சீராக்கப்பட்டமை மற்றும் வளமாக்கி உதவி தொகையினை சிறந்த முறையில் இலக்கிட்டமை என்பனவற்றினைத் தொடர்ந்து கோதுமை மற்றும் வளமாக்கி உதவித் தொகை மீதான செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதமாக இலக்கிடப்பட்டிருந்த போதிலும் உண்மையில் இடம் பெற்ற முதலீடு 5.8 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. தனியார் துறை உட் கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு மூலவளங்களை திரட்டுவதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியமொன்று நிறுவப்பட்டது. உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பு கட்டி தொழிற்படுத்தி உடைமையாக்கு/ கட்டு தொழிற்படு மாற்றஞ் செய் கொள்கைகளின் கீழ் ஊக்குவிக்கப்பட்டது.

தனியார் மயமாக்கல் மூலமான பணப் பெறுகைகள் வரவு செலவுத் திட்டத்தின் மூல இலக்கான ரூ. 5,000 மில்லியனிற்கு எதிராக ரூ. 22,535 மில்லியனை அடைந்தமையினால் அரச தொழில் முயற்சி சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் நல்ல முன்னேற்றத்தினை கண்டது. இலங்கை ரெலிகொம், இரு உப்புக் கம்பனிகள், தேசிய அபிவிருத்தி வங்கி, என்பனவற்றின் தனியார் மயமாக்கலும் பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்கு களின் விற்பனையும் 1997 இல் மேற்கொள்ளப்பட்டன. 1998 இல் தனியார் மயமாக்கல் பணப் பெறுகையினைப் பயன்படுத்தி அரசப் படுகடன்கள் மேலும் தீர்ப்பனவு செய்யப்படுமென எதிர்ப்பார் க்கப்படுகின்றது.

நியதி ஒதுக்குத் தேவையின் குறைப்புடன் இணைந்ததாக மேம்பட்ட இறை செயலாற்றமானது வட்டி வீதங்களை குறைப்பதற்கு உதவியது. திறைசேரி உண்டியல்கள் (1 ஆண்டு உண்டியல்) மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் ஆண்டுத் தொடக்கத்தின் 17.11 சதவீதத்திலிருந்து ஆண்டிறுதியில் 10.17 சதவீதத்திற்கு வீழச்சிய டைந்தது. ரூபாக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தின் 14.5 சதவீதத்திலிருந்து 1997 இறுதியில் 11.25 சதவீதத்திற்கு கீழ்நோக்கி சீராக்கப்பட்டது.

சந்தைப்படுத்தக்கூடிய நடுத்தரக்கால புதிய படுகடன் கருவியான திறைசேரி முறிகள் 1997 மார்ச்சில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இருவாரங் களுக்கொரு முறை அவை வழங்கப்படுகின்றன. மாறுபாடடையும் சந்தை வட்டி வீதங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் இக்கருவிகள் மீதான நறுக்கு வீதமும் 1997 முற்பகுதியின் 14.5 சதவீதத்திலிருந்து 1997 இறுதியில் 11.50 சதவீதத்திற்கு கீழ்நோக்கி சீராக்கப்பட்டது. வட்டி அமைப்பில் செய்யப்பட்ட இக்குறைப்பினால் எழும் நன்மைகளை 1998 வரவு செலவுத் திட்ட வெளிப்பாட்டில் பெருமளவுக்கு காணலாம். பற்றாக்குறையை நிதியிடுவதற்கான புதிய உள்நாட்டு மூலவளங்கள் 1997 இல் ரூபாக் கடன்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பனவற்றினூடாக முழுமையாகப் பெறப்பட்டது. திறைசேரி உண்டியல் மட்டத்தினை ரூ. 125 பில்லியனிலிருந்து ரூ. 115 பில்லியனிற்கு குறைவடையச் செய்தல் மற்றும் நடுத்தர நீண்டகால படுகடன் பிணையங்கள் சந்தையினை மேம்பாட டையச் செய்தல் ஆகிய அதனது நோக்கத்தினை அரசு 1998 இற்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தது. உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றி ட்டங்களுக்கு நிதியிடுவதற்காகவும் மற்றும் குறியீட்டு வட்டி வீதமொன்றிற்கான செயன்முறையாகவும் பன்னாட்டு சந்தையில் வழங்கப்பட்ட ஐ.அ. டொலர்கள் 50 மில்லியன் தொகை கொண்ட மாறுபடு வீத பத்திரங்களின் வழங்கலுக்கு வெளி நாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பிரதி பலிக்கும் வகையில் முழுமையாக உதவுதொகை செலுத்தப்பட்டது. வெளிநாட்டு மூலவளங்களின் குறைப்பயன்பாடானது தொடர்ந்தும் முக்கியவொரு பிரச்சினையாக விளங்குவதுடன் இதனை செயற்றி றன் வாய்ந்த முறையில் அணுகுவது அவசியமான தாகும்.

## 8.2 வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு


வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் 1997 இல் கணிசமான மேம்பாட்டினைக் காட்டின. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பின் முழுமைக் காரணத்தினால் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 1996இன் மொ.உ.உற்பத்தியின் 3.8 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதத்திற்கு வீழச்சியடைந்தது. மொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை (கொடைகளுக்குப்

பின்) 1996 இன் மொ.உ.உற்பத்தியின் 7.8 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வரி அரசிறையில் ஏற்பட்ட குறைப்பின் காரணத்தினால் அரசின் வருவாய் சேகரிப்புக்கள் 1996 இன் மொ.உ.உற்பத்தியின் 19.0 சதவீதத்திலிருந்து 18.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. வரிவிலக்குக்கான அடிமட்டங்கள் உயர்த்தப்பட்டமை, வரி வீதங்களின் குறைப்பு மற்றும் இவ்வாண்டில் வழங்கப்பட்ட வரிகளிலிருந்தான விலக்களிப்பும் தீர்வை தளர்த்தல்களும் என்பன காரணமாக வருமானவரி, இறக்குமதி தீர்வை மற்றும் தேசிய பாதுகாப்பு தீர்வைகள் ஆகிய முக்கிய அரசிறை மூலங்களிலிருந்தான வரி அரசிறைகள் மெதுவான வளர்ச்சியொன்றினை மட்டுமே குறித்துக் காட்டின. வெறியக் குடிவகை மற்றும் சிகரெட்டுக்கள் மீதான அதிகரித்த உற்பத்தி வரி வீதத்திற்கு மத்தியிலும் 1997 இல் இந்த பொருட்களின் உற்பத்தியும் விற்பனையும் குறைவடைந்தமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று வரி அரசிறைகள் அதிகரிக்கவில்லை. வட்டி, தீர்வைகள், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன நேரத்திற்கு சேகரிக்கப்பட்டு அவை தொடர்பாக செலுத்தப்படாதிருந்த நிலுவைகள் மீளப்பெறப்பட்டதன் காரணமாக வரியல்லாத அரசிறை முனைப்பான அதிகரிப்பொன்றினை பதிவு செய்தது. வரியல்லாத அரசிறைகள் 1996 இன் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீதத்திற்கு வகை கூறின.

மீண்டெழும் செலவினத்தை நியாயப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கோதுமை மாவின் விலைகள் மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டமை, அபிவிருத்தியினையும் குடும்ப அலகுகளுக்கான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களினையும் அவசியமானவர்களுக்கு சிறந்த முறையில் இலக்கிடல் என்பன 1996 இன் மொ.உ.உற்பத்தியின் 22.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவினத்தின் வளர்ச்சியினை மொ.உ.உற்பத்தியின் 20.7 சதவீதத்திற்கு கட்டுப்படுத்துவதற்கு உதவின. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பாதுகாப்புச் செலவினம் 1996 இன் 5.9 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த அண்மைக் காலத்தில் மீண்டெழும் செலவினம் 1995 இன் மொ.உ.உற்பத்தியின் 23.5 சதவீதத்திலிருந்து 1996 இல் மொ.உ.உற்பத்தியின் 22.8 சதவீதத்திற்கும் 1997 இல் 20.7 சதவீதத்திற்கும் தொடர்ச்சியாக குறைவடைந்து மேம்பட்ட காசு முகாமைத் துவத்தினதும் இறைக் கட்டுப்பாடுகளினதும் செயற்றிறனை பிரதிபலிக்கின்றது.

வரைபடம் 8.1
இறைக் குறிகாட்டிகள்




வட்டி வீதங்களின் குறைப்பின் நன்மையும் அரச படுகடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டமையினால் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட நன்மையும் 1997 இல் பகுதியளவில் பிரதிபலிக்கப்பட்டது. முழு நன்மைகளும் 1998 இல் பிரதிபலிக்கப்படும். மொ.உ.உற்பத்தியின் விகிதாசாரமாக வட்டிச் செலவுகள் 1996 இன் 6.4 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 6.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. வட்டிச் செலவுகள் மொத்த நடைமுறை செலவில் 30 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி மொத்த அரசிறையில் 34 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டதுடன் தொடர்ந்தும் அரசின் மீதான பாரிய சுமையாக விளங்குகின்றது. 1996 இன் 2.4 சதவீத பற்றாக்குறைக்கு எதிராக 1997 இல் முதனிலை கணக்கில் மொ.உ.உற்பத்தியின் 0.9 சதவீத மிகையொன்று காணப்பட்டமையானது அரசிறைப் பக்கத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்வொன்றாக விளங்குகின்றது. இதற்கும் மேலாக வட்டிச் செலவில் மேலும் கணிசமான குறைப்பினை எய்துவதற்கு வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையில் நிலைத்திருக்கக்கூடிய குறைப்பொன்றினை செய்வது அவசியமானதாகும்.

அரச முதலீடு (மூலதன செலவினதும் கடன் வழங்கலினதும் மொத்த தொகை) 1997 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு எதிராக மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடன் வழங்கலில் ஏற்பட்ட குறைப்பில் இது பெருமளவிற்கு பிரதிபலிக்கப்பட்டது. முன்னைய கடன் வழங்கலின் பேரிலான மீள்கொடுப்பனவுகள் 1997 இல் உயர்வடைந்து காணப்பட்டன. மூலதனச் செலவானது 1996 இன் மட்டத்தில் பேணப்பட்டது. தனியார் துறையினால்

சிறப்பாக செயலாற்றக் கூடிய துறைகளில் அவர்களின் நுழைவினை படிப்படியக அனுமதிக்கும் வேளையில் வீதிகள் போன்ற சில விடயங்களிலான மூலதன செலவினை அரசு பேணவேண்டியுள்ளது.

செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான தாமதங்கள், செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தும் முகவராண்மைகளில் நிலவும் பிணக்குகள், வெளிநாட்டு மூலவளங்களை ஈர்ப்பதற்கான உள்நாட்டு நிதியங்களின் பற்றாக்குறை போன்றவற்றின் காரணமாக பெரும்பாலும் முழுவதும் சலுகை அடிப்படையில் கிடைக்கத்தக்கதாகவிருந்த வெளிநாட்டு மூலவளங்களின் குறைப்பயன்பாட்டின் கணிசமான மட்டமொன்று காணப்பட்டது. பற்றாக்குறையை நிதியிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு கொடைகளினதும் கடன்களினதும் தொகை 1997 இல் மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதமாக மட்டுமே அமைந்து முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீத மட்டத்திலிருந்தான வீழ்ச்சியை குறித்துக் காட்டியது.

1997 இல் உள்நாட்டு மூலவளங்களின் திரட்டல் முக்கியமாக சந்தை அடிப்படையிலான கருவிகளூடாக இருந்தது. அரசு திறைசேரி உண்டியல் வரையறையை ரூ. 10,000 மில்லியனால் ரூ. 115,000 மில்லியனுக்குக் குறைத்தது. இது நடுத்தர நீண்டகால பிணைகள், சந்தையை முன்னேற்ற உதவும். அரச பிணைகள் மரபு ரீதியிலான சந்தைப்படுத்த முடியாத ரூபாக் கடன்களை திறைசேரி முறிகள் மூலம் மாற்றீடு செய்யும் ஓர் படிப்படியான செயல்முறையால் பெருமளவு சந்தையை அடிப்படையாகக் கொண்ட நிலைக்கு நகர்த்தப்பட்டது. ரூ. 10,000 மில்லியன் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. ரூ. 48,500 மில்லியன் கொண்ட ரூபாக் கடன்களும் இவ்வாண்டில் வழங்கப்பட்டன. இதில் ரூ. 15,000 மில்லியன் முதிர்ச்சியுறும் ரூபாக் கடன்களின் மீள் செலுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்டது. எல்லா ரூபாக் கடன்களும் ஊசேநி, தேசேவ, ஊநதி, அரச துறை சேமலாபநிதியம் போன்ற அரச நிதியங்களாலும் அரச நிறுவனங்களாலும் உதவப் பட்டன. ஊசேநி உம் தேசேவ உம் ரூ. 42,759 மில்லியனை ரூபாக் கடன்களில் முதலீடு செய்தன. அவை திறைசேரி முறிகளிலும் ரூ. 4,792 மில்லியனை முதலீடு செய்ததுடன், 1997 இல் அரசின் மொத்த கடன்பாடுகளின் 81 சதவீதத்திற்கு வகை கூறின. வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன் 1997 இல் ரூ. 2,172 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகளின் சுருக்கத் தாக்கம் மத்திய வங்கியால் அரசுக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 13,991 மில்லியன் கொண்ட குறைப்பால் மிகக் கூடிய அளவில் இருந்தது.

## 8.3 அரசிறைகளும் கொடைகளும்

1997 இல் அரசிறைகள் 13 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 164,865 மில்லியனை அடைந்தது. வரி அரசிறை ரூ. 144,006 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 11 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1997இல் வரியல்லா அரசிறை சொத்து வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் தெரிந்தெடுக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகள் (இலங்கை வங்கி, துறைமுக அதிகாரசபை போன்றவை) மீது விதிக்கப்பட்ட தீர்வைகளாலும் 30 சதவீதம் கொண்ட ஓர் கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட கொடைகள் 1996 இன் ரூ. 7,739 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 7,500 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### வரி அரசிறை

பல துறைகள் வருமான வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதால் இலங்கையின் வரி அரசிறைகளில் அநேகமானவை மறைமுக வரிகள் வடிவில் அமைந்துள்ளன. மறைமுக வரிகள் மொத்த வரி அரசிறையின் 86 சதவீதத்திற்கு வகை கூறின. எனினும், வரி அமைப்பின் பின்னோக்கிச் செல்லும் தன்மையைக் குறைக்கும் பொருட்டு அநேகமான உணவு விடயங்கள் உட்பட்ட பல அத்தியாவசிய மான நுகர்வுப்பொருட்கள் வரியிலிருந்து விலக்களிக் கப்பட்டுள்ளன. எனினும், இது வரி அமைப்பின் ஒளிவுமறைவினை குறைத்தது. பொருட்கள் மற்றும் பணிகள் வரி இக்குறைபாடுகளின் சிலவற்றை திருத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

மொ.உ.உ.இன் விகிதமாக வரி அரசிறை 1996 இன் 16.9 சதவீதத்திலிருந்து 1997 இல் 16.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரசிறை களின் பங்காகவும், வரி அரசிறைகள் 1996 இன் 89 சதவீதத்திலிருந்து 87 சதவீதத்திற்கு வீழ்ச்சியடை ந்தது. இது, இறக்குமதித் தீர்வை தேசிய பாதுகாப்புத் தீர்வை, வருமான வரி, சிகரெட் மீதான கலால் வரி, குடிவகை மீதான கலால் வரி என்பவற்றிலிரு ந்தான அரசிறை களிலான குறைந்த வளர்ச்சியால் ஏற்பட்டதாகும். மொத்தப் புரள்வு வரிகள் போன்ற உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளிலிருந் தான அரசிறைகள், தேசிய பாதுகாப்புத் தீர்வை, கலால் வரி, உரிமக் கட்டணங்கள் என்பவற்றிலிரு

## அட்டவணை 8.1

### அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிக மானவை | 1998 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 106,364 | 118,295 | 145,286 | 154,018 | 180,944 | 172,365 | 197,438 |
| மொத்த அரசிறை | 98,339 | 110,038 | 136,258 | 146,279 | 170,736 | 164,865 | 188,438 |
| வரி அரசிறை | 85,891 | 99,417 | 118,543 | 130,202 | 151,451 | 144,006 | 164,049 |
| வரியல்லா அரசிறை | 12,448 | 10,621 | 17,715 | 16,077 | 19,285 | 20,860 | 24,389 |
| கொடைகள் | 8,025 | 8,257 | 9,028 | 7,739 | 10,208 | 7,500 | 9,000 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 140,460 | 167,768 | 200,482 | 213,932 | 235,570 | 212,362 | 247,085 |
| நடைமுறை | 102,288 | 127,084 | 154,159 | 175,149 | 183,621 | 184,746 | 187,091 |
| மூலதன | 33,662 | 30,391 | 41,722 | 37,638 | 47,879 | 44,167 | 57,338 |
| மீள்கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் | 4,510 | 10,293 | 4,601 | 1,145 | 4,070 | -16,551 | 2,656 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை(-) | -3,949 | -17,046 | -17,901 | -28,871 | -12,885 | -19,881 | 1,347 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்குமுன்னும் தனியார்மயமின்றியும்) | -43,321 | -60,726 | -67,225 | -72,382 | -69,834 | -70,032 | -66,647 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு பின் தனியார் மயமாக்கலுடன்) | -34,096 | -49,473 | -55,196 | -59,914 | -54,626 | -39,997 | -49,647 |
| நிதியிடல் | 34,096 | 49,473 | 55,196 | 59,914 | 54,626 | 39,997 | 49,647 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 9,855 | 11,778 | 21,224 | 10,160 | 14,194 | 9,722 | 16,426 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் | 24,241 | 37,696 | 33,972 | 49,754 | 40,432 | 30,275 | 33,221 |
| சந்தைக் கடன்பாடுகள் | 22,229 | 38,362 | 33,424 | 39,391 | 40,432 | 39,644 | 33,221 |
| வங்கியல்லா | 28,308 | 37,205 | 26,359 | 26,301 | 40,432 | 41,816 | 33,221 |
| வங்கி | -6,079 | 1,157 | 7,065 | 13,090 | 0 | -2,172 | 0 |
| நாணய மேலாண்மை | -13,657 | 1,764 | 7,662 | 9,873 | 0 | -13,991 | 0 |
| வர்த்தக வங்கிகள் | 7,578 | -607.4 | -597 | 3,218 | 0 | 11,820 | 0 |
| ஏனைய கடன்பாடுகள் | 2,012 | -666 | 548 | 10,363 | - | -9,369 | 0 |
| குறிப்பிட்ட விடயங்கள்: வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை (கொடைகளுக்குமுன்) | -42,121 | -57,730 | -64,224 | -67,653 | -64,834 | -47,497 | -58,647 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக** | | | | | | | |
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 21.3 | 20.4 | 21.8 | 20.0 | 20.3 | 19.4 | 19.2 |
| மொத்த அரசிறை | 19.7 | 19.0 | 20.4 | 19.0 | 19.1 | 18.5 | 18.4 |
| வரி அரசிறை | 17.2 | 17.2 | 17.8 | 16.9 | 17.0 | 16.2 | 16.0 |
| வரியல்லா அரசிறை | 2.5 | 1.8 | 2.7 | 2.1 | 2.2 | 2.3 | 2.4 |
| கொடைகள் | 1.6 | 1.4 | 1.4 | 1.0 | 1.1 | 0.8 | 0.9 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 28.1 | 29.0 | 30.0 | 27.8 | 26.4 | 23.8 | 24.1 |
| நடைமுறை | 20.5 | 21.9 | 23.5 | 22.8 | 20.6 | 20.7 | 18.2 |
| மூலதன | 6.7 | 5.2 | 6.2 | 4.9 | 5.4 | 5.0 | 5.6 |
| மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல் | 0.9 | 1.8 | 0.3 | 0.1 | 0.5 | -1.9 | 0.3 |
| நடைமுறைக் கணக்கு மிகை/பற்றாக்குறை(-) | -0.8 | -2.9 | -3.1 | -3.8 | -1.4 | -2.2 | 0.1 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்னும் தனியார் மயமின்றியும்) | -8.7 | -10.5 | -10.0 | -9.4 | -7.8 | -7.9 | -6.5 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு பின் தனியார் மயமாக்கலுடன்) | -6.8 | -8.5 | -8.3 | -7.8 | -6.1 | -4.5 | -4.8 |
| நிதியிடல் | 6.8 | 8.5 | 8.3 | 7.8 | 6.1 | 4.5 | 4.8 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 2.0 | 2.0 | 3.2 | 1.3 | 1.6 | 1.1 | 1.6 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் | 4.9 | 6.5 | 5. 1 | 6.5 | 4.5 | 3.4 | 3.2 |
| சந்தைக் கடன்பாடுகள் | 4.4 | 6.6 | 5.0 | 5.1 | 4.5 | 4.5 | 3.2 |
| வங்கியல்லா | 5.7 | 6.4 | 3.9 | 3.4 | 4.5 | 4.7 | 3.2 |
| வங்கி | -1.2 | 0.2 | 1.1 | 1.7 | - | -0.2 | - |
| நாணய மேலாண்மை | -2.7 | 0.3 | 1.1 | 1.3 | - | -1.6 | - |
| வர்த்தக வங்கிகள் | 1.5 | -0.1 | -0.1 | 0.4 | - | 1.3 | - |
| ஏனைய கடன்பாடுகள் | 0.4 | -0.1 | 0.1 | 1.3 | - | -1.1 | - |
| குறிப்பிட்ட விடயங்கள்: வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்குமுன்) | -8.4 | -10.0 | -9.6 | -8.8 | -7.3 | -5.3 | -5.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ந்தான வரி அரசிறைகள் 14 சதவீதத்தால் அதிகரித்து மொத்த வரி அரசிறையில் அவற்றின் பங்கை 1996 இன் 59 சதவீதத்திலிருந்து 61 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவை மொ.உ.உ.இன் 9.8 சதவீதத்தின் அளவாகும்.

ஏற்றுமதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருட்களுக்குமான தேசிய பாதுகாப்புத் தீர்வை ரூ. 17,274 மில்லியனில் (மொ.உ.உ.இன் 1.9 சதவீதம்) 5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இம் மூலத்திலிருந்தான அரசிறை மொத்த வரி சேகரிப்புகளின் 12 சதவீதத்திற்கு வகை கூறியது. பொறி மற்றும் கருவிகளின் இறக்கு மதிகள் மீதான தேசிய பாதுகாப்புத் தீர்வை 2 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு குறைக்கப் பட்டதற்கு மத்தியிலும் இறக்குமதிகளிலிருந்தான சேகரிப்புக்கள் 1997 இல் 13 சதவீத அதிகரிப்பை பதிவு செய்து. 1997 இல் கூடிய இறக்குமதி வளர்ச்சியைப் பிரதிபலித்தன.


மொத்த விற்பனை வரிகளிலிருந்தான அரசிறைகள் ரூ. 43,257 மில்லியனாக விளங்கி 15 சதவீதத்தால் அதிரித்தமைக்கு தயாரிப்புத்துறை யல்லாத துறையிலிருந்தான அதிகரித்த சேகரிப்பும், வரிவீதப் பிரிவுகளில் ஏற்பட்ட முறையே 6 சதவீதத் திலிருந்து 10 சதவீதத்திற்கும், 7 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்குமான ஓர் அதிகரிப்பின் முழுமையான தாக்கமும் முக்கிய காரணிகளாக விளங்கின. பொருட்கள் பணிகள் வரிக்கான நகர்வை வசதிப்படுத்துவதற்கு, இவ்வீதங்கள் 1997 நவெம்பரில் மேலும் திருத்தப்பட்டன. (7 சதவீத 11 சதவீத வரிப்பிரிவு 8 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் 20 சதவீத வரிப்பிரிவு 18 சதவீதத்திற்கும்) அரசிறையின் மீது இது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. 1997 இன் மொத்த வரிகளில் மொத்த விற்பனை வரி 30 சதவீதத்திற்கு வகை கூறியது. 1997 இல் தயாரிப்புத் துறையிலிருந்தான மொத்த விற்பனை வரிச் சேகரிப்புக்கள் 7 சதவீதத் தால் அதிகரித்தன. தயாரிப்புத் துறையல்லாதவை யிலிருந்தான மொத்த விற்பனை வரிச் சேகரிப்புக்கள் 38 சதவீதத்தால் அதிகரித்து, மின், தொலைத் தொடர்பு, வான் வழிப்பயணம், சுற்றுலாப் பணிகள் போன்ற துறைகளிலான குறிப்பிட்ட நடவடிக்கை களின் விரிந்த விரிவாக்கத்தில் பிரதிபலிக்கின்றன. 1996 நவெம்பரி லிருந்து வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவன ங்கள் மீதான மொத்த விற்பனை வரி 2 சதவீதத்தில் ஒருமுகப்படுத்தப்பட்டதுடன் 1997 நவெம்பரிலிருந்து 1 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டமையானது வருவாயில் எதிர்மாறான விளைவைக் கொண்டிருந்தது. 1997 இல் இறக்குமதி களின் மொத்தப் பெறுமதியில் ஏற்பட்ட 15 சதவீத அதிகரிப்புக்கு மத்தியில் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரியிலிருந்தான அரசிறை 7 சதவீதம் கொண்ட ஓர் மிதமான அதிகரிப்பையே பதிவு செய்தது. தீர்வைக்குட்பட்ட இறக்குமதிக ளிலான ஒரு மிதமான வளர்ச்சி (7 சதவீதம்) பாலைப் பைகளிலடைப்பதற்குப் பாவிக்கும் பொறி கள், தேயிலைப்பைகள் மற்றும் இறைச்சி, நூல், தேயிலைக் கைத்தொழிலில் பாவிக்கப்படும் வண்ண வேறுபாட்டுக் கருவிகள், தாங்கிகள், பௌசர்கள், பாரவண்டிகள் போன்ற குறிப்பிடப்பட்ட இறக்குமதி களுக்கு வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல் மற்றும் மொத்த விற்பனை வரி விலக்களித்தல் என்பவற் றாலும் 1997 நவெம்பரிலிருந்து குறிப்பீட்டில் ஏற்பட்ட 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கான குறைப்பினாலும் ஏற்பட்டதாகும்.

உற்பத்தி வரிகள் 18 சதவீதத்தால் அதிகரித்து மொத்த அரசிறையின் 18 சதவீதத்திற்கு வகை கூறின. 1997 இல் சிகரெட்டிலிருந்தான. உற்பத்தி வரி சேகரிப்புக்கள், முன்னைய ஆண்டின் 46 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத் தால் அதிகரித்தன. உற்பத்திவரி 7 சதவீதத்தால் மேல்நோக்கித் திருத்தப்பட்டதற்கு மத்தியிலும் சிகரெட்டிலிருந்தான வரிச் சேகரிப்புகளின் மெதுவான போக்கு சிகரெட்டின் விற்பனைகளில் ஏற்பட்ட 6 சதவீத வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். சிகரெட்டின் சட்டரீதியிலான விற்பனையில் ஏற்பட்ட குறைப்பு, சிகரெட் மீதானவரி மட்டம் ஏற்கனவே அதிகூடிய மட்டத்தை அடைந்ததால் நுகர்வைக் குறைத்தமையை எடுத்துக் காட்டுகிறது. இது சட்ட பூர்வமற்ற சிகரெட் விற்பனையில் ஓர் விரிவாக்கத் திற்கு இட்டுச் சென்றது. கலப்புச் சாராயம் தவிர்ந்த வெறியக் குடிவகைகளின் எல்லா முக்கிய வகைகளின் மொத்த உற்பத்தி 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததற்கு மத்தியிலும், வெறியக் குடிவகை மீதான உற்பத்தி வரியின் மேல் நோக்கிய திருத்தம் பியர் உற்பத்தியில் ஏற்பட்ட 19 சதவீத அதிகரிப்பு என்பன குடிவகைகளிலிருந்தான உற்பத்தி வரிச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட 6 சதவீத அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன. உற்பத்தி (விசேட உற்பத்தி) சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அரசிறை 49 சதவீதம் கொண்ட ஓர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியமைக்கு தெரிந்தெடுக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மீதான உற்பத்தி தீர்வையின் ஓர் விசேட வகை மாற்றீடாக பெறுமான விகிதத் தீர்வையை கூடிய வரி வீதமொன்றில் உயர்த்தியமை, வெறியக் குடிவகை மீதான 10 சதவீத உற்பத்தி வரி அறிமுகப்படுத்தப்பட்டமை, தெரிந்தெடுக்கப் பட்ட பயணிகள் ஊர்திகளின் இறக்குமதி மீதான

5 சதவீத உற்பத்திவரி என்பன முக்கிய காரணிகளாக விளங்கின. சிகரெட்டுகள், குடிவகை மற்றும் தெரிந் தெடுக்கப்பட்ட நீண்டகால நுகர்வுகள் என்பன மீதான கலால் தீர்வை வீதங்கள் அவ்வாறான உற்பத்திகள் மீதான மொத்த விற்பனை வரி 20 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதால் ஏற்பட்ட அரசிறை இழப்பிற்கு ஈடுசெய்யும் பொருட்டு 1997 நவெம்பரிலிருந்து அதிகரிக்கப்பட்டன. 1997 நவெம்பரிலிருந்து உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான வரிவிதிப்பு வரி அமைப்பை இலகுவாக்கும் பொருட்டு சிகரெட்டுகள், குடிவகை, உந்து ஊர்திகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.

இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட 15 சதவீத அதிகரிப்புக்கு மத்தியிலும், மொத்த இறக்குமதிகளில்

**வரைபடம் 8.2**
**அரசிறை உள்ளமைப்பு**




தீர்வைக்குரிய இறக்குமதிகளின் பங்கு 1996 இன் 39.6 சதவீதத்திலிருந்து 1997 இல் 37.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தமையால் இறக்குமதிகளிலிருந்தான தீர்வைச் சேகரிப்புக்கள் 1997 இல் 5 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன. 1997 சனவரி நடுப்பகுதியிலிருந்து பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிகள் மீது 10 சதவீதம் கொண்ட பகுதியளவிலான தீர்வைத் தளர்த்தல், சீனி, அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற விடயங்களின் இறக்குமதிகள் மீதான முழுமையான மற்றும் பகுதியளவிலான தீர்வைத் தளர்த்தல். பேருந்து அடிச்சட்டம் மரம், வேளாண்மைக் கருவி, புத்தகங்கள் போன்ற வரி வீதங்களின் கீழ்நோக்கிய திருத்தம் என்பன இறக்குமதிகள் மீதான தீர்வைகள் குறைந்து செல்வதற்கான முக்கிய காரணிகளாக விளங்கின. மொத்த இறக்குமதிகள் மீதான சராசரித் தீர்வை வீதம் 1996 இன் 8.5 சதவீதத்திலிருந்து 1997 இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், இறக்குமதிகள் மீதான பயன்தரு தீர்வை வீதம் 20.6 சதவீதத்திலிருந்து 19.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, மொ.உ.உ.இன் சதவீதமாக இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு 1996 இன் 3.3 சதவீதத்திலிருந்து 1997 இல் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வருமான வரிகளிலிருந்தான அரசிறை 1997 இல் சிறிதளவில் அதிகரித்தது. இது தனியாள் வரிகள் 9 சதவீதத்தால் அதிகரித்தமையினதும் நாட்டைக் காக்கும் பங்களிப்புக்களிலிருந்தான சேகரிப்புக்கள் ரூ. 125 மில்லியனிலிருந்து ரூ. 226 மில்லியனுக்கு அதிகரித்தமையினதும், கூட்டு வருமானங்கள் மீதான வரிகள் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையினதும் தேறிய விளைவாகும். மொ.உ.உ. இன் சதவீதமான வருமானவரி அரசிறை மொ.உ.உ. இன் சதவீதமாக வருமானவரி அரசிறை 1996 இன் 2.7 சதவீதத்திலிருந்து 1997 இல் 2.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கூட்டுமுயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட ஏனைய வரிச் சலுகைகளுடன் முதலிட்டு வரிச் சலுகையில் ஏற்பட்ட அதிகரிப்பு பெறுமானத் தேய்வுச் சலுகையில் தனியாள் வரிகளின் வருமானப் பிரிவுகளின் மேல் நோக்கிய சீராக்கங்கள் என்பன வருமான வரிச் சேகரிப்புக்களை மெதுவடையச் செய்தன.

முத்திரைத் தீர்வைகள், பெறுமதிக்கேற்றவாறு அதிகரித்துச் செல்லும் முத்திரைத் தீர்வை முறை பின்பற்றப்பட்டமையாலும், பரந்த வீச்சிலுள்ள பத்திரங்களுக்கு 2 சதவீதம் கொண்ட ஒரே மாதிரியான முத்திரைத் தீர்வை வீதம் அறிமுகப்படுத்தப் பட்டமையாலும், இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியினாலும் 47 சதவீதத்தால் அதிகரித்தன.

## அட்டவணை 8.2
## மூலங்களின்படி அரசிறையின் தொகுப்பு

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிகம் | 1998 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **85,891** | **99,417** | **118,543** | **130,202** | **151,451** | **144,006** | **164,049** |
| வருமான வரிகள் | 12,543 | 15,277 | 17,161 | 20,751 | 21,345 | 20,847 | 24,064 |
| தனிப்பட்ட | 5,235 | 5,621 | 7,358 | 7,315 | 7,825 | 7,958 | 8,639 |
| கூட்டு | 7,308 | 9,656 | 9,803 | 13,311 | 13,120 | 12,563 | 14,850 |
| நாட்டைக் காக்கும் உதவுதொகை | - | - | - | 125 | 400 | 326 | 575 |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 3,493 | 4,386 | 5,162 | 5,279 | 6,788 | 7,754 | 8,056 |
| மத்திய வங்கியினால் உடைமையாக கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 1,073 | 471 | 1,050 | 1,604 | 350 | 1,080 | 0 |
| உள்நாட்டு பொருள்கள் பணிகள் மீதான வரிகள் | 47,963 | 56,685 | 70,797 | 77,105 | 92,883 | 87,699 | 100,968 |
| பொது விற்பனைகளும் வியாபார மொத்த விற்பனை வரியும் | 29,663 | 32,300 | 36,429 | 37,631 | 43,478 | 43,257 | 47,130 |
| தயாரிப்பு | 9,231 | 9,171 | 9,906 | 8,874 | 12,023 | 9,509 | 10,255 |
| தயாரிப்பு அல்லா | 4,825 | 6,445 | 7,074 | 9,711 | 8,922 | 13,362 | 10,800 |
| இறக்குமதிகள் | 15,607 | 16,684 | 19,449 | 19,046 | 22,532 | 20,386 | 23,975 |
| கலால் தீர்வை | 11,655 | 14,632 | 19,436 | 22,067 | 28,936 | 26,050 | 31,464 |
| வெறியக் குடிவகைகள் | 4,063 | 4,686 | 6,298 | 5,839 | 7,780 | 6,187 | 8,369 |
| புகையிலை | 6,866 | 7,888 | 8,788 | 12,833 | 15,175 | 14,804 | 16,295 |
| ஏனைய | 726 | 2,058 | 4,350 | 3,395 | 5,981 | 5,059 | 6,800 |
| பாதுகாப்புத் தீர்வை | 6,589 | 9,693 | 14,408 | 16,441 | 18,426 | 17,274 | 20,500 |
| உரிமக் கட்டணங்கள் | 56 | 60 | 524 | 966 | 2,043 | 1,118 | 1,874 |
| சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 20,819 | 22,598 | 24,373 | 25,464 | 30,085 | 26,626 | 30,961 |
| இறக்குமதிகள் | 20,762 | 22,598 | 24,365 | 25,459 | 30,085 | 26,626 | 30,961 |
| ஏற்றுமதிகள் | 57 | - | 8 | 5 | - | - | - |
| **வரியல்லா அரசிறை** | **12,448** | **10,621** | **17,715** | **16,077** | **19,453** | **20,860** | **24,389** |
| சொத்து வருவாய் | 8,154 | 7,360 | 12,011 | 10,059 | 12,271 | 14,590 | 15,178 |
| அதில்: மத்திய வங்கியின் இலாபங்கள் | 1,000 | 1,200 | 1,200 | 1,700 | 1,500 | 1,500 | 2,650 |
| வட்டி வருவாய் | 4,390 | 4,560 | 6,991 | 5,222 | 6,496 | 7,752 | 7,108 |
| வர்த்தக தொழில் முயற்சிகளின் மிகை | - | - | - | - | - | - | - |
| அறவீடுகளும், கட்டணங்களும் | 1,303 | 988 | 1,751 | 2,827 | 3,009 | 2,248 | 2,858 |
| ஏனைய வரியல்லா வருவாய் | 2,991 | 2,273 | 3,953 | 3,191 | 4,173 | 4,022 | 6,353 |
| மொத்த வருவாய் | 98,339 | 110,038 | 136,258 | 146,279 | 170,904 | 164,865 | 188,438 |

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிகம் | 1998 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **17.2** | **17.2** | **17.8** | **16.9** | **17.0** | **16.2** | **16.0** |
| வருமான வரிகள் | 2.5 | 2.6 | 2.6 | 2.7 | 2.4 | 2.3 | 2.3 |
| தனிப்பட்ட | 1.0 | 1.0 | 1.1 | 1.0 | 0.9 | 0.9 | 0.8 |
| கூட்டு | 1.5 | 1.7 | 1.5 | 1.7 | 1.5 | 1.4 | 1.4 |
| நாட்டைக் காக்கும் உதவுதொகை | - | - | - | | | 0.0 | (0) |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 0.7 | 0.8 | 0.8 | 0.7 | 0.8 | 0.9 | 0.8 |
| மத்திய வங்கியினால் உடைமையாக கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 0.2 | 0.1 | 0.2 | 0.2 | 0.0 | 0.1 | 0 |
| உள்நாட்டு பொருள்கள் பணிகள் மீதான வரிகள் | | | | | | | |
| பொது விற்பனைகளும் வியாபார மொத்த | 9.6 | 9.8 | 10.6 | 10.0 | 10.4 | 9.8 | 9.8 |
| விற்பனை வரியும் | 5.9 | 5.6 | 5.5 | 4.9 | 4.9 | 4.9 | 4.6 |
| தயாரிப்பு | 1.8 | 1.6 | 1.5 | 1.2 | 1.3 | 1.1 | 1.0 |
| தயாரிப்பு அல்லா | 1.0 | 1.1 | 1.1 | 1.3 | 1.0 | 1.5 | 1.1 |
| இறக்குமதிகள் | 3.1 | 2. 9 | 2.9 | 2.5 | 2.5 | 2.3 | 2.3 |
| கலால் தீர்வை | 2.3 | 2.5 | 2.9 | 2. 9 | 3.2 | 2.9 | 3.1 |
| வெறியக் குடிவகைகள் | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.9 | 0.7 | 0.8 |
| புகையிலை | 1.4 | 1.4 | 1.3 | 1.7 | 1.7 | 1.7 | 1.6 |
| ஏனைய | 0.1 | 0.4 | 0.7 | 0.4 | 0.7 | 0.6 | 0.7 |
| பாதுகாப்புத் தீர்வை | 1.3 | 1.7 | 2.2 | 2.1 | 2.1 | 1.9 | 2.0 |
| உரிமக் கட்டணங்கள் | - | - | 0.1 | 0.1 | 0.2 | 0.1 | 0.2 |
| சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 4.2 | 3.9 | 3.6 | 3.3 | 3.4 | 3.0 | 3.0 |
| இறக்குமதிகள் | 4.2 | 3.9 | 3.6 | 3.3 | 3.4 | 2.9 | 3.0 |
| ஏற்றுமதிகள் | - | - | - | - | - | - | 0.0 |
| **வரியல்லா அரசிறை** | **2.5** | **1.8** | **2.7** | **2.0** | **2.2** | **2.3** | **2.4** |
| சொத்து வருவாய் | 1.6 | 1.3 | 1.8 | 1.3 | 1.4 | 1.6 | 1.5 |
| அதில்: மத்திய வங்கியின் இலாபங்கள் | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.3 |
| வட்டி வருவாய் | 0.9 | 0.8 | 1.0 | 0.7 | 0.7 | 0.9 | 0.7 |
| வர்த்தக தொழில் முயற்சிகளின் மிகை | - | - | - | - | - | | 0 |
| அறவீடுகளும், கட்டணங்களும் | 0.3 | 0.2 | 0.3 | 0.4 | 0.3 | 0.3 | 0.3 |
| ஏனைய வரியல்லா வருவாய் | 0.6 | 0.4 | 0.6 | 0.4 | 0.5 | 0.5 | 0.6 |
| **மொத்த வருவாய்** | **19.7** | **19.0** | **20.4** | **19.0** | **19.2** | **18.5** | **18.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சிறப்புக்குறிப்பு 7**

## வரி இசைவு

பெறப்படும் வரி அரசிறை வரித்தளம், வரி வீதம், வரி இசைவு வீதம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது. வரித்தளம் (வரி விதிப்புக்குட்பட்ட அனைத்து விடயங்களினதும் பெறுமதி) பொருளாதார வளர்ச்சியுடனும் வரிக் கொள்கைகளிலான மாற்றங்களினாலும் வேறுபடுகின்றது. வரி முறைைய இலகுவாக்கும் நீண்ட கால நோக்கத்துடனான ஒரு சீரான வரிமுறைக்கு இட்டுச் செல்லும் வகையில் வரிவீதங்கள் அண்மையில் கீழ் நோக்கித் திருத்தப்பட்டன.வரி இசைவை அதிகரிக்கும் நோக்குடன் முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்புக்களையும் வழங்குவதற்காகவும் வரி வீதங்கள் குறைக்கப்பட்டது. வரி அமைப்பை இலகுவாக்கி வரி வீதத்தை குறைக்கும் சூழலில் வரி அரசிறையின் அதிகரிப்பானது வரி இசைவு வீதம் மற்றும் வரிக்குறைப்பு செலுத்தல் பக்கத்திலிருந்தான பதிலுறுத்தல் என்பனவற்றில் பெருமளவில் தங்கியுள்ளது.

வரி இசைவு என்பது கோவைப்படுத்தலான இசைவு, செலுத்தலுக்கான இசைவு மற்றும் அறிவிப்பதற்கான இசைவு போன்றன வரிச் சட்டங்களுக்கான தன்னிச்சையான இசைவாகும். கோவைப்படுத்தலுக்கான இசைவு என்பது நிலுவைகள் சேராது உரிய திகதியிலேயோ அல்லது அதற்கு முன்போ வரியையோ வரித் தவணைப் பணத்தையோ செலுத்துவதாகும். தெரிவிக்கும் இசைவு என்பது விரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வரிக் கூற்றுக்களில் குறைத்துத் தெரிவிக்காது, வரிக்குட்பட்ட வருமானத்தையும் ஏனைய விபரங்களையும் செலுத்தப்பட வேண்டிய வரியைச் சரியாகக் குறிப்பிடுவதாகும். இவ்வனைத்துப் பிரிவுகளும் 100 சதவீத வரி இசைவை எய்துதல் சிறந்த நிலைமையாகும். தன்னிச்சையான இசைவு மட்டங்கள் தாழ்ந்ததாகவும் திருப்திகரமற்றதாகவும் இருக்கும்போது, வரி நிருவாகம் மட்டுப்படுத்தப்பட்ட அதனது மனிதவள மற்றும் நிதியியல் மூலவளங்களை பிரயோகித்து மேலதிகச் செலவுகளை ஏற்படுத்தி வலுப்படுத்தும் நடவடிக்கைகளை பிரயோகிக்க வேண்டிய கட்டாயப்படுத்தலுக்குள்ளாகும். இத்துடன் இந் நடைமுறைகளை நிறைவேற்றுகையில் வரி நிருவாக முறையின் செயல் திறனைப் பாதிக்கும் தடைகள் எழக்கூடும்.

இலங்கையில் கோவைப்படுத்தலுக்கான இசைவு மிகவும் குறைவாக இருந்ததுடன், குறிப்பிட்ட திகதிக்கு ஒரு மாதத்திற்கு பின்புகூட 50 -60 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. இந்தத் தோற்றப்பாடு முக்கியமாக வருமானவரியைப் பொறுத்தவரையில் தெளிவாகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணை கடந்த சில ஆண்டுகளில் கோவைப்படுததலுக்கான இசைவு வீதங்களைத் தருகின்றது. இது குறிப்பிட்ட திகதியிலிருந்து 13 மாதங்களின் பின்னரே 90 சதவீத அளவில் அதிகரித்தது.

**அட்டவணை 1**

கூற்றுக்களைக் கோவைப்படுத்துவதற்கான இசைவு

| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|
| வருமானவரி | | | | | | |
| கோவைப்படுத்தப்பட வேண்டிய நாளின் 1 மாதத்தின் பின் | 51 | 55 | 58 | 59 | 59 | 53 |
| கோவைப்படுத்தப்பட வேண்டிய நாளின் 13மாதங்களின்பின் | 81 | 90 | 90 | 87 | 0 | 89 |
| புரள்வு வரி | | | | | | |
| கோவைப்படுத்தப்பட வேண்டிய நாளின் 3மாதங்களின் பின் | 68-70 | 75-78 | 76-80 | 77-81 | 77-81 | 77-80 |

*மூலம்: உண்ணாட்டிறைவரித் திணைக்களம்*

இலங்கையில் கோவைப்படுத்தலுக்கான இசைவு மிகவும் குறைவாக இருந்ததுடன் குநிப்பிட்ட திகதிக்கு ஒரு மாதத்திற்குப் பின்புகூட 50-60 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. இந்தத் தோற்றப்பாடு முக்கியமாக வருமானவரியைப் பொறுத்தளவில் தெளிவாகின்றது. கீழே தரப்பட்ட அட்டவைண கடந்த சில ஆண்டுகளில் கோவைப்படுத்தலுக்கான இசைவு வீதங்களைத் தருகின்றது. இது குறிப்பிட்ட திகதியிலிருந்து 13 மாதங்களின் பின்னரே 90 சதவீத அளவில் அதிகரித்தது.

இலங்கையில் கோவைப்படுத்தலுக்கான இசைவு அபிவிருத்தியடைந்த நாடுகளின் 96 சதவீதமான தெரிந்த வரி செலுத்துவோர் உரிய நாளிலும் 98 சத விதமானோர் ஒரு மாதத்திற்குப் பின்னரும் 100 சதவீதமானோர் இரண்டு மாதங்களிலும் கூற்றுக்களை அறிவிப்பதுடன் ஒப்பிடுகைளில் மோசமானதாக உள்ளது.

சிறப்புக்குறிப்பு 7 (தொடர்ச்சி)

இலங்கையில் வரிகளின் செலுத்தும் இசைவும் குறிப்பாக சுய மதிப்பீட்டில் பெரும்பாலும் ஈடுபடும் சம்பளமல்லாத ஊதியம் உழைப்போரின் வருமானவரி செலுத்துதல் உற்சாக மூட்டுவதாக இல்லை. வருமானவரி நிலுவைகள் தொடர்ந்தும் மொத்தச் சேகரிப்பின் 1/3 பங்குக்கு மேலாக உள்ளது.

**அட்டவணை 2**

வரி செலுத்தலில் தவறுதல்

| | 1985 | 1990 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|
| வரிகளின் வகை | | | | | |
| மொத்தவரிவருவாயின் சதவீத மொன்றாக மொத்தத் தவறுதல் | 37.03 | 31.58 | 12.04 | 11.63 | 13.79 |
| மொத்த வருமான வரி சேகரிப்பின் சதவீதமொன்றாக மொத்த வருமான வரி தவறுதல் | 87.11 | 73.80 | 31.09 | 35.40 | 37.66 |
| மொத்தப்புரள்வுவரி சேகரிப்பின் சதவீதமொன்றாக மொத்த புரள்வுவரி தவறுதல்கள் | 4.95 | 12.70 | 6.82 | 5.27 | 4.99 |

மூலம்: உண்ணாட்டரசிறைத் திணைக்களம்

வரிகளைக் குறைத்து அறிவிக்கும் அளவு மீதான நம்பகமான தரவு கிடைக்காத போதிலும், வரிகளைக் குறைத்து அறிவிப்பது அதிகளவில் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பு, உரிய பதிவேடுகளில் பதியப்படாத வருமானங்களைப் பெறுவோரிடையே பரந்தளவில் காணப்படுவதாக நம்பப்படுகின்றது. இவ்வகைகள் முக்கியமாக கொடுப்பனவு மீது பணிகளை வழங்கும் தொழில் சார் துறையினரையும் உரிய பற்றுச் சீட்டுக்களை வழங்காத வர்த்தகர்களையும் உள்ளடக்குகிறது.

இலங்கையில் சார்பு ரீதியில் குறைந்த வரி இசைவுக்கு பின்வருவன காரணமாகக் கூறப்படுகின்றது.

***சிக்கலான வரி அமைப்பு*** : வரிமுறை சிக்கலானதாயும் அடிக்கடி திருத்தப்படுவதாலும் வரிசெலுத்துவோர் அதனை புரிந்து கொள்ளாததுடன் அவர்கள் சுயமதிப்பீட்டில் கஸ்டங்களையும் கொண்டிருப்பர். வரி செலுத்துபவர் அவரது செலுத்த வேண்டிய வரியை பெரும் கஸ்டமின்றி கணிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

***அதியுயர் எல்லை வரி வீதங்கள்*** : அதியுயர் எல்லை வரிவீதம் ஒன்று வரி இசைவை மேலும் செலவுடையதாக்குவதுடன் வரி நிருவாகத்தில் ஊழலுக்கும் இட்டுச் செல்லும்.

***வரி செலுத்துவோரின் கடப்பாடுகள் பற்றி அவர்களின் அறிவு போதாமை*** : வரி செலுத்துபவர் வரிகள் செலுத்தவதன் முக்கியத்துவத்தையும் உரிய திகதிகளில் வரியைச் செலுத்தாததால் எழும் செலவையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

***வரி ஏய்ப்பை நோக்கிய சமூக மனப்பாங்கு:*** இலங்கையில், வரி ஏய்ப்பு கோவைப்படுத்தப்படாமை கொடுப்பனவுகளிலான தாமதம் என்பன சமூக விரோதமாகக் கருதப்படுவதில்லை. வரி செலுத்தாமைக்கு தண்டப்பணம் செலுத்துவது சமூகத்தில் பாரிய குற்றமாகக் கருதப்படுவதில்லை.

***வரி முறையின் நேர்மையும் நியாயமும்:*** சிறந்த வரி இசைவுக்காக வரி முறையானது நேர்மையும் நியாயமும் கொண்டது என பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். சில முக்கிய துறைகளும் ஆட்களும் விலக்களிப்புக்கள் மூலம் வரிக் கொடுப்பனவை செலுத்தாது, மிக நீண்ட காலத்திற்கு கொடுப்பனவுகளை தாமதப்படுத்தியும் இருக்கின்ற வேளையில் ஏனையோரின் வரி இசைவு இல்லாமைக்கு ஓர் நியாயமான காரணம் இருக்கிறது. கிரமமான இடைவெளிகளில் வரி மன்னிப்புக்களை வழங்கல் வரி இசைவைப் பாதிக்கின்றது. இது சமமின்மைக்கு இட்டுச் செல்வதோடு தன்னிச்சையான உண்மையான வரிசெலுத்துவோரை ஊக்கமிழக்கச் செய்கின்றது. இது போலவே, அதே வகையில் உள்ள வரி செலுத்துவோருக்கு பக்கச்சார்பான நடத்துமுறையும் வரி இசைவைக் குறைக்கின்றது.

***வரி நிருவாகத்தின் வினைத்திறன் மட்டம்:*** வரி அலுவலர்கள் கடமை மனப்பாங்குடையோராகவும் வரிச் சட்டங்களின் நிருவாகத்தில் திறன் பெற்றோராகவும் இருத்தல் வேண்டும். அவை பயன்தருவனவாகக் காணப்படின் இசைவும் வலுப்படுத்தும் வழிமுறைகளும் ஒன்றையொன்று இணைநிறைவாக்கக் கூடியதாக இருக்கும் தவறிழைப்போருக்கும் சட்டப்படி வரி செலுத்துவோருக்கும் வரிச்சட்டங்களுக்கு இசைந்து செல்வதைவிட வேறு எந்த விருப்புத் தேர்வும் கிடையாது.

வரி இசைவை மேம்படுத்துவதற்கான சில வழிமுறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அவை வரிப்பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் வரி அமைப்பினை இலகுவாக்கல் வரிவிதிப்பதற்கான அடிமட்டத்தில் ஓர் அதிகரிப்பு, வரி சேகரிப்பு நடைமுறைகளின் கணனி மயமாக்கம் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. இன்னும், வரி இசைவை முன்னேற்றுவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். அவற்றினிடையே

- வரிச்சட்டங்கள் மேலும் இலகுவாக்கப்பட வேண்டியிருப்பதுடன், வரி அலுவல்கள் வரி செலுத்துவோருக்கு இலகுவான மொழியில் வழிகாட்டல்களை வழங்கவேண்டும்.

- தவறிழைக்கும் வரி செலுத்துவோர் உரிய நடவடிக்கைக்குட்படுத்தப்பட வேண்டும். ஒழுங்காக வரி செலுத்துவோரை கௌரவமாக வைத்திருப்பதற்காக அவை பயன்தரும் முறையில் இனங்காணப்பட்டு வரி செலுத்தத்தவறுவோர் மீது கடுமையான தண்டங்கள் விதிக்கப்பட வேண்டும்

- வரி செலுத்துவோருடன் சிறந்த உறவுகளை பேணுவதற்கு வரி நிருவாகிகளுக்கு பயிற்சியொன்று அளிக்கப்படவேண்டுவதுடன், வரிசெலுத்துவோர் வரிப் பரிசோதர்களால விழிப்பாக வைத்திருக்கப்படுவர்.

- கணக்கீட்டு மற்றும் வரி கணக்காய்வு தொடர்பாக செயற்றிறன்மிக்க முறையொன்று இருத்தல் வேண்டும். சேகரிக்கப்படாத வரிகள் ஒன்று சேர்வதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

- வரி ஏய்ப்பாளர்கள் மற்றும் வரி மோசடியாளர்களை கண்டுபிடிப்பதை கடினமாக்கும் விலக்களிப்புக்கள் மற்றும் தளர்த்தல்கள் குறைக்கப்பட வேண்டும்.

- பலதரப்பட்ட வரிகள், வரிச் சட்டங்கள் என்பனவற்றை பின்பற்ற வேண்டிய முக்கியத்துவம், இசைவின்மையால் ஏற்படும் விளைவுகள் என்பனபற்றி வரிசெலுத்துவோருக்கு உணர்த்தப்பட வேண்டும். வெகுசன தொடர்புச் சாதனங்கள் மற்றும் பொதுக் கருத்தரங்குகள் போன்றவற்றை பொதுமக்களுககுளுகு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தமுடியும் இக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வரி செலுத்துவோர் உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் மட்டத்தையும் சென்றடையலாம்.

1997 நவெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்த உறுதிப்பத்திரம், திறைசேரி உண்டியல்கள் சார்ந்த மீள் கொள்வனவு உடன்படிக்கைகள், ஈட்டைக் கொண்ட பிணைகள் குத்தகை உடன்படிக்கைகள் மீதான ஈட்டு முறிகள் என்பன மீதான முத்திரைத் தீர்வையில் குறைப்பின் முழுமையான தாக்கம் 1998 இல் உணரப்படும். டீசல் வாகனங்கள் மீதான இருமுக வகை வரிவிதிப்பு குறைந்த மட்டமான ரூ. 5000 கொண்ட குறைந்த மட்டத்தில் ஒருமுகப்படுத்தப்பட்டதிற்கு மத்தியிலும் வாகன இருப்புக்குரிய வரிமீதான அதிகரிப்பு காரணமாக மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட டீசல் வரி, ஆடம்பர வரி மற்றும் ஏனைய அரசிறைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை 16 சதவீதத்தால் அதிகரித்தது. மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வரிகள் 1996 இல் சேகரிக்கப்பட்ட ரூ. 1,604 மில்லியனுக்கெதிராக 1997 இல் ரூ. 1,080 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து, மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் அளவில் ஏற்பட்ட குறைப்பிலும், 1997 இல் திறைசேரி உண்டியல்கள் மீதான குறைந்த வட்டி வீதங்களிலும் இது பிரதிபலித்தது.

## வரியல்லா அரசிறை

வரியல்லா அரசிறை 30 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டி, 1997 இல் மொத்த அரசிறையின் 13 சதவீதத்திற்கு வகை கூறியது. இது வரி அரசிறையில் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களிலிருந்தான அரசிறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒரு பகுதியை ஈடு செய்ய உதவியது. வரியல்லா அரசிறை, 1996 இன் மொ.உ.உ இன் 2.0 சதவீதத்திலிருந்து 2.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதிகரிப்புக்கள் வட்டிக் கொடுப்பனவுகள், இலாபங்கள், பங்கிலாபங்கள், தீர்வைகள் என்பன மீது காணப்பட்டன. வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 7,752 மில்லியனாக விளங்கி 48 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தமைக்கு இலங்கை மின்சபை (ரூ. 2,227 மில்லியன்) சிறிலங்கா ரெலிகொம் (ரூ. 2,470 மில்லியன்) தேசிய அபிவிருத்தி வங்கி (1,229 மில்லியன்) போன்ற நிறுவனங்களால் குறித்த

நேரத்திலான வட்டிக் கொடுப்பனவு காரணமாக விளங்கியது. இலாபங்கள், பங்கு இலாபங்கள், வரிவிதிப்புகளிலிருந்தான பெறுகைகள் 1996 இன் ரூ. 2,321 மில்லியனுக்கெதிராக 1997 இல் ரூ. 4,189 மில்லியனாக விளங்கியது. இலங்கை வங்கி கடன்களின் 1993 இல் வழங்கப்பட்ட மீள் அமைப்பு முறிகளுக்கான ஒரு பகுதிக் கொடுப்பனவுகளின் சேகரிப்புக்களாக ரூ. 1,000 மில்லியனை மாற்றியதுடன் இம்முறிகள் மீதான வரிகளின் ஒரு பகுதியாகவும் (ரூ. 636 மில்லியன்) இது விளங்கியது. நிதிச் சட்டத்தின் கீழ் இலங்கை வங்கி (ரூபா 400 மில்லியன்) இலங்கை துறைமுக அதிகார சபை (ரூபா 400 மில்லியன்) என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வரி விதிப்புக்களும், 1997 இல் இவ் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. அரச வெளியிடுகள், பதிவுக் கட்டணங்கள், ஏனைய நிருவாகக் கட்டணங்கள் என்பன மீதான மேல் நோக்கிய விலைத் திருத்தங்களும் கடவுச்சீட்டுக் கட்டணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் வரியல்லா அரசிறையை அதிகரிப்பதற்கு உதவின. 1997 இல் விதவைகள் அநாதைகள் ஒய்வூதியத்துக்கான ஊழியர்களின் பங்களிப்பில் ஏற்பட்ட 1 சதவீதப் புள்ளி அதிகரிப்பும் வாடகை மற்றும் தேசிய சீட்டிழுப்புக்கள் என்பனவும் ஏனைய வரியல்லா அரசிறையில் கணிசமான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன.


## வெளிநாட்டுக் கொடைகள்

1997 இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் ரூபா 7,500 மில்லியனாக விளங்கி 1996 உடன் ஒப்பிடுகையில் 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. மொ.உ.உ. இன் ஒரு சதவீதமாக் கொடைகள் வீழ்ச்சியடைந்து வருவதுடன் இவை 1997 இல் மொ.உ.உ. இன் 0.8 சதவீதமாக விளங்கின. செயற்றிட்டக் கொடைகள் மீதான பெறுகைகள் ரூ. 4,635 மில்லியனாக விளங்கி மொத்தக் கொடைகளின் 62 சதவீதத்திற்கு வகை கூறின. ஜப்பான் மிகப் பெரிய கொடை வழங்குனராக விளங்கி, 1997 இன் மொத்தக் கொடைகளின் 32 சதவீதத்திற்கு வகை கூறின.

## 8.4 செலவினம்

1997 இல் மொத்த அரச செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 212,362 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டில் 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 0.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உ. இன் ஒரு சதவீதமாக மொத்த செலவினம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 1995 இன் 30 சதவீதத்துடனும் 1996 இன் 27.8 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 1997 இல் 23.8 சதவீத வீழ்சியைப் பதிவு செய்தது. இது முழுமையாக தேறிய கடன் வழங்கலிலான குறைப்பினால் ஏற்பட்டு நேர்மாறான தேறிய கடன் வழங்கல் போல் தோற்றமளிக்கும் மிகக்கூடிய தனியார் மயமாக்கல் பெறுகையை (ரூ. 22,535 மில்லியன்) பிரதிபலிக்கின்றது. மொ.உ.உ. இன் ஒரு விகிதமாக தனியார் மயப்படுத்தலால் பெறும் பெறுகைகள் நீங்கலான செலவினம் 1996 இன் 28.4 சதவீதத்தில் இலிருந்து 1997 இல் 26.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1997 இல் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் விளைவு ரூ. 1,226 மில்லியன் கொண்ட ஓர் வெளிக் கொடுப்பனவாகும்.

**வரைபடம் 8.3**
**செலவின உள்ளமைப்பு**



கடன் வழங்கும் செயற்றிட்டத்தின் மீது ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக அரச முதலீடு 1996 இலான மொ.உ.உ. இன் 6.0 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைச் செலவினத்தின் வளர்ச்சி 1996 இன் 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தில் கட்டுப்படுத்தப் பட்டது. இது நலன்புரிச் செலவினத்தின் சிறந்த முகாமைத்துவம் உட்பட்ட கடுமையான நடைமுறைச் செலவினக் கட்டுப்பாடுகளால் இயலுமானது. அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் வீழ்ச்சியடைந்து கோதுமை உதவிக் கொடுப்பனவின் மீதான குறைந்த செலவினத்தில் பிரதிபலிக்கின்றது.

## நடைமுறைச் செலவினம்

நடைமுறைச் செலவினம் 1996 இன் 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தால் அதிகரித்தது. மொ.உ.உ இன் சதவீதமாக நடைமுறைச் செலவினம் 1997 இல் 2.1 சதவீதப் புள்ளிகளால் 20.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பாதுகாப்புச் செலவினம் அநேகமாக ரூ. 44,971 மில்லியன் கொண்ட அதே மட்டத்திலேயே இருந்து, மொத்தச் செலவினத்தின் 21 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும் மொ.உ.உ.இன் சதவீதமாக 1996 இன் 5.8 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பாதுகாப்புச் செலவினம் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வழங்கப்பட்ட நீண்டகால முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அரச படுகடன் மீதான வட்டி என்பன 1997 இன் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 79 சதவீதத்திற்கு வகைகூறின.

அரசு முரண்பாடுகளை நீக்குவதற்கான தேவையை இனங்கண்டு சம்பளங்கள் ஆணைக் குழுவின் விதந்துரைப்புக்களில் அநேகமானவற்றை ஏற்றுக் கொண்டது. புதிய சம்பளத்திட்டங்கள் 1997 இல் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் சம்பள அதிகரிப்பின் 40 சதவீதம் 1997 இல் கொடுக்கப்படவிருக்கிறது. இதனால் சம்பளச் செலவு 1997 இல் 17 சதவீதத்திற்கு அதிகரித்து முன்னைய இரு ஆண்டுகளின் 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இலான மொத்த மீண்டெழும் செலவினத்தின் 24 சதவீதத்திற்கு வகை கூறியது.

வட்டிக் கொடுப்பனவுகள் 1997இல் 13 சதவீதத்தால் அதிகரித்ததுடன் நடைமுறைச் செலவினத்தின் 30 சதவீத்திற்கு வகை கூறின. ரூ. 55,246 மில்லியன் கொண்ட மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் ரூ. 6227 மில்லியன் இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வழங்கப்பட்ட நீண்டகால முறிகளுக்கானவையாகும். 1996 இன் இரண்டாம் அரைப் பகுதியில் இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிபு வங்கிக்கும் வழங்கப்பட்ட பிணைகளின் பெறுமதி ஆண்டொன்றிற்கு 14 சதவீத வட்டியில் ரூ. 23,872 மில்லியனாக விளங்கியது.

1997 இல் ரூபாக்கடன்கள் மீதான வட்டி 1996 இன் ரூ. 23,201 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 30,021 மில்லியனாக விளங்கியது. 1997 இல் பெறப்பட்ட ரூபாக் கடன்கள் ரூ. 48,500 மில்லியனாக விளங்கி, 1996 இன் ஆண்டொன்றுக்கான 14.14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டொன்றுக்கு 12.93 சதவீதம் கொண்ட சராசரி வட்டியைக் கொண்டிருந்தது. புதிய கடன்களின் முதிர்ச்சிக் காலம் 1996 இன் 5 வருடங்களிலிருந்து 4.5 வருடங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. திறைசேரி முறிகள் மீதான வட்டி வீதங்கள் 11.50 சதவீதத்திற்கும் 14.00 சதவீதத்திற்குமிடையே இருந்தன. முதிர்ச்சிக் காலங்கள் 2 வருடங்களுக்கிடையேயும் 4 வருடங்களுக்கிடையேயும் இருந்தன. இம்முறிகள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் 12.50 சதவீதமாக விளங்கியது. இம்முறிகள் மீதான வட்டி அரையாண்டுக்கொருமுறை செலுத்தப்பட்டதுடன் 1997 இல் ரூ. 327 மில்லியன் செலுத்தப்பட்டது. 1997 இல் 12 மாத திறைசேரி உண்டியல் வட்டி வீதங்கள் 1996 இன் 19.05 சதவீதத்திற்கும் 14.40 சதவீதத்திற்கும் இடையே இருந்ததுடன் ஒப்பிடுகையில் 17.11 சதவீதத்திற்கும் 10.17 சதவீதத்திறிகுமிடையே இருந்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிறிதளவில் ரூ. 18174 மில்லியனுக்கு அதிகரித்தன. இவ் அதிகரிப்பு, பகுதியளவில் 1997 ஓகத்தில் தீர்ப்பனவு செய்து கழிவு செய்யப்பட்ட ரூ. 10,000 மில்லியன் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 325 மில்லியனை வட்டியாகச் செலுத்தியதால் ஏற்பட்டதாகும். இல்லாவிடில் இவற்றுக்கான வட்டி 1998 இல் செலுத்தப்பட வேண்டியதாகும். வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 6,265 மில்லியனுக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி பகுதியளவில் ஜப்பானிய யென்னுக்கெதிராக ரூபாப் பெறுமதி உயர்ந்தமையால் ஏற்பட்டதாகும். 1997 இல் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு மீதான சராசரி வட்டி வீதம் 1996 இன் 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீதமாக விளங்கியது.

1997 இல் நடைமுறை மாற்றல்கள் மற்றும் உதவுதொகைகள் 1996 இன் 14 சதவீத அதிகரிப்பு

டன் ஒப்பிடுகையில் ரூ. 45,670 இலட்சத்திற்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாக கோதுமை மாவின் விலை கிலோகிராம் ஒன்றிற்கு ரூ. 16.95 இலிருந்து 1997 இல் உதவுதொகை அற்ற விலை மட்டமான ரூ. 18.95 இற்கு சீராக்கப் பட்டமையால் கோதுமைமா உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1996 இன் ரூ. 5,515 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,000 மில்லியனுக்குக் குறைக்கப் பட்டமை விளங்கியது. இது பன்னாட்டு கோதுமைத் தானியத்தின் விலைகள் வீழ்ச்சியடைந்தவரும் நிலைமையில் மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்துக்கான கோதுமைத் தானியத்தின் சராசரி இறக்குமதி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு 1996 இன் ஐ.அ.டொலர் 225.31 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 166.98 இற்கு வீழ்ச்சியடைந்தது. விலைச் சீராக்கங்களுடன் நுகர்வும் 616,799 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்தது.

புகையிரதப் பகுதித் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் இழப்புக்களையே ஏற்படுத்தின. தொழிற்பாட்டு இழப்பு 1996 இன் ரூ 888 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997 இல் ரூ 712 மில்லியனுக்கு வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்ப ட்டுள்ளது. தபால் திணைக்களமும் 1996 இன் ரூ 344 மில்லியன் கொண்ட இழப்புடன் ஒப்பிடுகையில் 1997 இல் ரூ 255 மில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பை ஏற்படுத்தியது. அரசின் ஏனைய மட்டங்களுக்கான கொடுப்பனவுகள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளால் தொடக்கப்பட்ட புதிய செயற்றிட்டங்களால் ரூ. 1,941 மில்லியனுக்கு 22 சதவீதத்தால் அதிகரித்தது. 1997 இல் ஏனைய அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 2,657 மில்லியனைப் பதிவு செய்து 16 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. பொருளாதாரப் பணிகளை வழங்குவதற்கு அமைக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள், சமூகப் பணிகளை வழங்குவதற்கான நிறுவனங்களுக்கான மாற்றல்களில் பதிவு செய்யப் பட்ட 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூ. 17,916 மில்லியனுக்கு 16 சதவீதுத்தால் அதிகரித்தன. இது முக்கியமாக வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி ஓய்வூதியத்திலான 5 சதவீத அதிகரிப்பினாலும், உரிய காலத்திற்கு முன்பே ஓய்வு பெறும் திட்டத்தின் தாக்கத்தாலும் ஏற்பட்டது.

சமுர்த்திக் கொடுப்பனவுகள் 2 சதவீதத்தால் ரூ. 8,718 மில்லியனக்கு அதிகரித்தன. 1997 இல் 1.9 மில்லியன் சமுர்த்தி / ஜனசவிய நலன்புரியைப் பெறும் குடும்பங்களும் 31,369 சமுர்த்தி ஊக்குவிப்பா ளர்களும் இருந்தனர்.

வளமாக்கி உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1996 இன் ரூ. 1,500 மில்லியனிலிருந்து சிறு வேளா ண்மையாளர்களில் பெரும்பங்கினர் பயனடைவதை உறுதிப்படுத்தும் விதத்தில் 1997 ஒற்றோபரில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டத்தின் கீழ் யூரியாவின் அதிகரித்த உதவுதொகை கூறு காரணமாக ரூ. 1,895 மில்லியனுக்கு அதிகரித்தன. யூரியாவின் விலை ஒவ்வோர் 50 கிலோக்கிறாமுக்கும் ரூ. 590 இலிருந்து ரூ 350 இற்குக் குறைக்கப்பட்டது.

குடும்ப அலகுகளுக்கான ஏனைய மாற்றல்கள் ரூ. 7,631 மில்லியனாக அமைந்ததுடன் இவற்றில் அகதிகள், வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகள் முறையே ரூ. 3,357 மில்லியனாகவும் ரூ. 548 மில்லியனாகவும் விளங்கின.

நாளாந்த தொழிற்பாட்டுச் செலவினங்களைக் கொண்டிருக்கும் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் .6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன், 1997 வரவு செலவுத் திட்ட த்தில் அறிவிக்கப்பட்டது போல முக்கியத்தவம ல்லாத செலவினங்களில் ஏற்பட்ட 20 சதவீதக் குறைப்பு காரணமாக இது ஓர் சாதனையாகவும் விளங்குகிறது.

தொழிற்பாட்டு அடிப்படையின்படி, கல்வி, நலத்துறை, நலன்புரி, சமூகப் பணிகள் என்பன வற்றை உள்ளடக்கிய சமூகப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் 1996 இலான மொ.உ.உ. இன் 7.7 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இச் செலவினங்கள் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 32 சதவீதத்திற்கு வகைகூறின. கல்வி மற்றும் நலத்துறை மீதான செலவினம் சமூகப்பணிகள் மீதான மொத்தச் செலவினத்தின் 46 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் இது 1996 இலான 43 சதவீதத்தை விடக் கூடியதாகும்.

பொருளாதாரப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் 1997 இல் ரூ. 7,418 மில்லியனுக்கு 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்தும் தொலைத் தொடர்பூட்டலும், வர்த்தகமும் வாணிப மும், வேளாண்மையும் நீர்ப்பாசன வசதிகளும் வலுவும் நீர் வழங்கலும் என்பன மீதான செலவினம் ஓர் வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது.

## அட்டவணை 8.3

## செலவினத்தினதும் மீள்கொடுப்பனவை கழித்த கடன்வழங்கலினதும் பொருளாதார பகுப்பாய்வு

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிகம் | 1998 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **102,288** | **127,084** | **154,159** | **175,148** | **183,621** | **184,748** | **187,091** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 44,895 | 54,700 | 75,447 | 80,003 | 83,086 | 83,830 | 85,605 |
| சம்பளங்களும் கூலிகளும் | 26,332 | 29,309 | 34,909 | 38,332 | 44,603 | 44,676 | 47,855 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 18,563 | 25,391 | 40,538 | 41,671 | 38,483 | 39,154 | 37,749 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 30,203 | 38,031 | 38,225 | 48,923 | 55,492 | 55,246 | 55,367 |
| வெளிநாட்டு | 5,102 | 5,511 | 6,162 | 6,739 | 8,338 | 6,692 | 7,418 |
| உள்நாட்டு (அ) | 25,101 | 32,520 | 32,063 | 42,184 | 47,154 | 48,554 | 47,949 |
| நடைமுறை மாற்றல்களும், உதவிக் கொடுப்பனவுகளும் | 27,190 | 34,180 | 40,487 | 46,223 | 44,044 | 45,672 | 45,419 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 1,571 | 2,634 | 7,841 | 8,232 | 2,239 | 2,693 | 2,374 |
| அரச நிறுவனங்களுக்கு | 2,031 | 1,976 | 2,182 | 2,284 | 3,931 | 2,657 | 5,381 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 896 | 1,307 | 1,157 | 1,592 | 1,464 | 1,941 | 1,524 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 22,692 | 28,263 | 29,307 | 34,114 | 35,410 | 38,383 | 36,140 |
| உணவு முத்திரை, உணவு உதவிக் கொடுப்பனவு | 4,580 | 4,654 | 1,799 | 591 | 385 | 182 | 375 |
| சனசவிய/சமுர்த்தி | 3,685 | 5,369 | 5,130 | 8,591 | 8,692 | 8,718 | 9,670 |
| ஓய்வூதியங்கள் | 10,516 | 13,271 | 14,549 | 15,465 | 18,075 | 17,916 | 18,285 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | - | 630 | 1,345 | 1,500 | 1,500 | 1,895 | 1,500 |
| ஏனையவை | 3,911 | 4,339 | 6,484 | 7,967 | 6,758 | 9,670 | 6,310 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு/நிகழக்கூடியது | - | - | - | - | 1,000 | - | 700 |
| **மூலதனச் செலவினம்** | **33,662** | **30,391** | **41,722** | **37,638** | **47,879** | **44,167** | **57,338** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 19,719 | 16,747 | 22,589 | 20,938 | 28,726 | 25,653 | 35,185 |
| மூலதன மாற்றல்கள் | 13,943 | 13,644 | 19,134 | 16,701 | 19,153 | 18,515 | 22,153 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 4,311 | 4,246 | 7,614 | 6,017 | 6,371 | 5,880 | 6,396 |
| அரச நிறுவனங்களுக்கு | 8,551 | 8,433 | 10,446 | 9,603 | 11,532 | 11,041 | 13,980 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 1,036 | 914 | 1,057 | 1,042 | 1,200 | 1,511 | 1,745 |
| ஏனையவை | 45 | 51 | 17 | 39 | 50 | 83 | 32 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | - | - | - | - |
| மீள் கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல் | 4,510 | 10,293 | 4,601 | 1,145 | 4,070 | -16,551 | 2,656 |
| முற்பணக் கணக்குகள் | 410 | 2,462 | -1,580 | 630 | 500 | 1,226 | 500 |
| கடன் வழங்கல் | 6,265 | 10,064 | 11,087 | 8,335 | 12,665 | 7,278 | 13,658 |
| மீளமைப்புச் செலவு | 1,465 | 3,739 | 3,191 | 90 | 801 | 2,193 | 1,500 |
| தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் | -1,200 | -2,996 | -3,001 | -4,728 | -5,000 | -22,535 | -8,000 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் | -2,430 | -2,976 | -5,097 | -3,182 | -4,896 | -4,713 | -5,002 |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **140,460** | **167,768** | **200,482** | **213,931** | **235,570** | **212,364** | **247,085** |

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிகம் | 1998 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **20.5** | **21.9** | **23.1** | **22.8** | **20.6** | **20.7** | **18.2** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 9.0 | 9.4 | 11.3 | 10.4 | 9.3 | 9.4 | 8.3 |
| சம்பளங்களும் கூலிகளும் | 5.3 | 5.1 | 5.2 | 5.0 | 5.0 | 5.0 | 4.7 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 3.7 | 4.4 | 6.1 | 5.4 | 4.3 | 4.4 | 3.7 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 6.0 | 6.6 | 5.7 | 6.4 | 6.2 | 6.2 | 5.4 |
| வெளிநாட்டு | 1.0 | 1.0 | 0.9 | 0.9 | 0.9 | 0.8 | 0.7 |
| உள்நாட்டு (அ) | 5.0 | 5.6 | 4.8 | 5.5 | 5.3 | 5.5 | 4.7 |
| நடைமுறை மாற்றல்களும், உதவிக் கொடுப்பனவுகளும் | 5.4 | 5.9 | 6.1 | 6.0 | 4.9 | 5.1 | 4.4 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.3 | 0.5 | 1.2 | 1.1 | 0.3 | 0.3 | 0.2 |
| அரச நிறுவனங்களுக்கு | 0.4 | 0.3 | 0.3 | 0.3 | 0.4 | 0.3 | 0.5 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 4.5 | 4.9 | 4.4 | 4.4 | 4.0 | 4.3 | 3.5 |
| உணவு முத்திரை, உணவு உதவிக் கொடுப்பனவு | 0.9 | 0.8 | 0.3 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| சனசவிய/சமுர்த்தி | 0.7 | 0.9 | 0.8 | 1.1 | 1.0 | 1.0 | 0.9 |
| ஓய்வூதியங்கள் | 2.1 | 2.3 | 2.2 | 2.0 | 2.0 | 2.0 | 1.8 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 0.0 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 |
| ஏனையவை | - | 0.7 | 1.0 | 1.0 | 0.8 | 1.1 | 0.6 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு/நிகழக்கூடியது | - | - | - | 0.0 | - | 0.0 | 0.1 |
| **மூலதனச் செலவினம்** | **6.7** | **5.2** | **6.2** | **4.9** | **5.4** | **5.0** | **5.6** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 3.9 | 2.9 | 3.4 | 2.7 | 3.2 | 2.9 | 3.4 |
| மூலதன மாற்றல்கள் | 2.8 | 2.4 | 2.9 | 2.2 | 2.1 | 2.1 | 2.2 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.9 | 0.7 | 1.1 | 0.8 | 0.7 | 0.7 | 0.6 |
| அரச நிறுவனங்களுக்கு | 1.7 | 1.5 | 1.6 | 1.2 | 1.3 | 1.2 | 1.4 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| ஏனையவை | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| மீள் கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல் | 0.9 | 1.8 | 0.7 | 0.1 | 0.5 | -1.9 | 0.3 |
| முற்பணக் கணக்குகள் | 0.1 | 0.4 | -0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.0 |
| கடன் வழங்கல் | 1.3 | 1.7 | 1.7 | 1.1 | 1.4 | 0.8 | 1.3 |
| மீளமைப்புச் செலவு | 0.3 | 0.6 | 0.5 | 0.0 | 0.1 | 0.2 | 0.1 |
| தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் | -0.2 | -0.5 | -0.4 | -0.6 | -0.6 | -2.5 | -0.8 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் | -0.5 | -0.5 | -0.8 | -0.4 | -0.5 | -0.5 | -0.5 |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **28.1** | **29.0** | **30.0** | **27.8** | **26.4** | **23.8** | **24.1** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொது அரச பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் ரூ. 58, 926 மில்லியனுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்தது. பாதுகாப்பு, பொது மக்கள் ஒழுங்கு மற்றும் காப்பு மீதான செலவினம் பொது அரச பணிகள் மீதான செலவினத்தின் 76 சதவீதத்திற்கு வகை கூறியதுடன், இது 1996 இன் 81 சதவீதத்தடன் ஒப்பிடத்தக்கது. மொ.உ.உ.இன் சதவீதமாக பாதுகாப்பு, பொது மக்கள் ஒழுங்கு மற்றும் காப்பு மீதான செலவினம் 1996 இன் 5.7 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## அரச முதலீடு

மூலதனச் செலவினத்தையும் அரச தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல்களையும் உள்ளடக்கிய அரச முதலீடு ரூ. 51,445 மில்லியனுக்கு 12 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், நிர்ணயிக்கப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம் குறைவானதாகும். இது வெளிநாட்டு நிதியங்களின் குறைப் பயன்பாட்டிற்கு இட்டுச் சென்ற நடைமுறைப்படுத்தல் மற்றும் செயல்முறைத் தாமதங்களால் ஏற்பட்டதாகும்.

இலங்கை மின்சபை, 1997 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 4,441 மில்லியனில் ரூ. 3,479 மில்லியனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள் மீது பயன்படுத்தியது. இலங்கை துறைமுக அதிகாரசபையும், ஸ்ரீலங்கா ரெலிகொம் மும் முறையே ரூ. 984 மில்லியனையும், ரூ. 1,367 மில்லியனையும் பெற்றன. இலங்கை துறைமுக அதிகாரசபை ரூ. 5,300 மில்லியன் கொண்ட கடன்வழங்கல் ஒதுக்கில் 19 சதவீதத்தைப் பயன்படுத்தியது. ஸ்ரீலங்கா ரெலிகொம் மொத்த ஒதுக்கான ரூ. 2,081 மில்லியனில் 66 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தியது. பெற்றோலியக் கூட்டுத் தாபனமும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகச் செயற்றிட்டங்கள் போன்ற ஏனைய செயற்றிட்டங்களும் 1997 இல் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 493 மில்லியனுக்கெதிராக ரூ. 692 மில்லியனைப் பெற்றன. இத்துடன், அரசு வீட்டுத் துறைக்கு சுறதுற திறிய போன்ற கடன்திட்டங்களூடாகவும் சுய வேலைவாய்ப்பு கொடுகடன் திட்டங்களூடாகவும் ரூ. 750 மிலலியனை விடுவித்தது.

கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் 1996 இன் ரூ. 6,017 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 5,880 மில்லியனாக விளங்கியது. (தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை ரூ. 2,513 மில்லியன்) இலங்கை மின் சபை ரூ. 811 மில்லியன், இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ரூ. 1746 மில்லியன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ரூ. 454 மில்லியன்).

ஏனைய அரச நிறுவனங்களுக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 11,041 மில்லியனுக்கு 15 சதவீதத்தால் அதிகரித்தன. இம் மொத்தத்தில் 79 சதவீதம் போக்குவரத்து, தொடர்பூட்டல், வேளாண்மை, நீர்ப்பாசனம் போன்ற பொருளாதாரப் பணிகளுக்கான வையாகும். வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கான மாற்றல்கள் ரூ. 5,826 மில்லியனுக்கு 32 சதவீதத்தால் அதிகரித்தன. இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை ரூ. 1,626 மில்லியனைப் பெற்றது. நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையும் 1997 இல் ரூ. 511 மில்லியன் கொண்ட தொகையைப் பெற்றது. சமூகப் பணிகளுக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 1,836 மில்லியனுக்கு 65 சதவீதத்தால் அதிகரித்தன. சமுர்த்தி அதிகார சபை ரூ. 936 மில்லியனையும் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் ரூ. 453 மிலியனையும் பெற்றன.

அரசும் மீள்அமைப்புச் செலவாக ரூ. 2,193 மில்லியனை செலவிட்டது. அரசுக்கான நிதியங்களின் பழைய கடன்கள் கடன்வழங்கலிலான மீள்பாய்ச்சல் மீதான ரூ. 4,713 மில்லியனை மீள்கொடுப்பனவுகளாக வழங்கியது.

## 8.5 மாகாண சபைகள்

மாகாண சபைகளின் வருமான சேகரிப்பு 10 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 5,395 மில்லியனாக அமைந்தது. கடந்த ஆண்டைப் போலவே இது அவைகளுடைய மூலவள தேவைப்பாட்டில் 23 சதவீதத்தை சமாளிப்பதற்கு போதுமானதாக விருந்தது. அவைகளின் செலவினங்கள் ரூ. 23,455 மில்லியனுக்கு 6 சதவீதத்தால் அதிகரித்தன. 1996 இன் ரூ. 16,873 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997 இல் ரூ. 18,348 மில்லியன் கொண்ட பற்றாக்குறையை விளைவித்தது. முழுப்பற்றாக்குறைக்கும் மொத்த கொடைகளாக அல்லது நடைமுறை மாற்றல்களாக மத்திய அரசின் மாற்றல்கள் ஊடாக நிதியளிக்கப்பட்ட தொகை 92 சதவீதத்திற்கு வகைகூறியது. எஞ்சிய தொகை தேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கொடைகளாகவும் மற்றும் மூலதன செயற்றிட்டங்களுக்கான பொருத்தமான கொடைகளாகவும் அமைந்தன.

### வருமானம்

உற்பத்தி மற்றும் செலவினங்கள் மீதான வரிகள் ரூ. 3,743 மில்லியனுக்கு 10 சதவீதத்தினால்

## அட்டவணை 8.4

### செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1997 தற்காலிகமானவை | 1998 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | | | | | | | |
| **அரச பொதுப் பணிகள்** | **27,564** | **30,444** | **47,888** | **53,915** | **54,955** | **58,926** | **56,948** |
| சிவில் நிர்வாகம் | 7,405 | 4,637 | 6,562 | 10,207 | 13,431 | 13956 | 12,577 |
| பாதுகாப்பு | 15,413 | 19,415 | 35,186 | 38,117 | 33,528 | 37062 | 36,457 |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் | 4,746 | 6,392 | 6,140 | 5,591 | 7,997 | 7908 | 7,914 |
| **சமூகப் பணிகள்** | **37,476** | **47,656** | **57,648** | **59,294** | **58,740** | **59,742** | **64,356** |
| கல்வி | 11,225 | 14,836 | 15,784 | 16,018 | 13,407 | 17757 | 21,920 |
| சுகாதாரம் | 5,711 | 7,666 | 8,818 | 9,260 | 12,054 | 9581 | 10,269 |
| நலன்புரி | 20,255 | 24,560 | 32,106 | 32,824 | 31,824 | 31251 | 30,858 |
| வீடமைப்பு | - | - | - | - | - | - | - |
| சனசமூகப்பணிகள் | 285 | 593 | 941 | 1,191 | 1,455 | 1154 | 1,309 |
| **பொருளாதாரப் பணிகள்** | **4,328** | **6,195** | **8,078** | **8,807** | **8,532** | **7,419** | **10,756** |
| வேளாண்மையும், நீர்ப்பாசனமும் | 1,483 | 2,506 | 3,826 | 3,894 | 4,175 | 3723 | 4,969 |
| மீன்பிடி | 107 | 99 | 105 | 148 | 199 | 156 | 350 |
| தயாரிப்பும், சுரங்க அகழ்வும் | 403 | 351 | 252 | 282 | 650 | 599 | 767 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 93 | 518 | 990 | 590 | 728 | 486 | 874 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 1,346 | 2,024 | 2,014 | 2,423 | 1,822 | 1674 | 2,672 |
| வர்த்தகமும் வாணிபமும் | 203 | 72 | 172 | 891 | 241 | 159 | 243 |
| ஏனையவை | 693 | 625 | 719 | 580 | 718 | 622 | 880 |
| **ஏனையவை** | **32,920** | **42,789** | **40,546** | **53,132** | **60,394** | **58,659** | **54,332** |
| அதில்: வட்டி | 30,203 | 38,031 | 38,687 | 48,923 | 55,492 | 55246 | 55,368 |
| **குறைச் செலவுக்கான ஒதுக்கீடு** | - | - | - | - | **1,000** | - | **700** |
| **மொத்த நடைமுறைச் செலவு** | **102,288** | **127,084** | **154,159** | **175,149** | **183,621** | **184,746** | **187,091** |
| **மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | | | | | | | |
| **அரச பொதுப் பணிகள்** | **4,085** | **2,390** | **5,776** | **3,161** | **3,810** | **3,627** | **7,527** |
| சிவில் நிர்வாகம் | **3,463** | **1,753** | **3,962** | **1,935** | **3,810** | **3627** | **7,527** |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் | 622 | 637 | 1,814 | 1,226 | - | | |
| **சமூகப் பணிகள்** | **6,075** | **7,677** | **9,854** | **10,322** | **13,676** | **11,552** | **15,059** |
| கல்வி | 2,845 | 2,877 | 3,124 | 4,384 | 4,552 | 4592 | 5,957 |
| நலம் | 1,353 | 1,519 | 2,134 | 2,538 | 3,965 | 2554 | 4,308 |
| நலன்புரி | 1,084 | 1,681 | 1,690 | 868 | 852 | 751 | 396 |
| வீடமைப்பு | 604 | 802 | 1,610 | 1,174 | 1,526 | 792 | 1,647 |
| சனசமூகப்பணிகள் | 189 | 798 | 1,297 | 1,359 | 2,782 | 2863 | 2,751 |
| **பொருளாதாரப் பணிகள்** | **29,600** | **29,304** | **36,106** | **31,409** | **41,808** | **32,479** | **46,633** |
| வேளாண்மையும், நீர்ப்பாசனமும் | 5,682 | 5,179 | 6,060 | 4,718 | 6,233 | 3780 | 6,730 |
| அதில் மகாவலி செயற்றிட்டம் | 2,810 | 2,598 | 3,090 | 1,940 | 1,655 | 1626 | 1,265 |
| மீன்பிடி | 124 | 368 | 361 | 311 | 525 | 480 | 773 |
| தயாரிப்பும், சுரங்க அகழ்வும் | 1,471 | 22 | 250 | 356 | 1,256 | 1442 | 2,167 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 4,728 | 5,518 | 5,003 | 6,035 | 7,949 | 6816 | 10,203 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 10,165 | 14,522 | 18,888 | 12,636 | 18,468 | 12946 | 20,536 |
| வர்த்தகமும் வாணிபமும் | 364 | 182 | 20 | 105 | 321 | 182 | 909 |
| ஏனையவை | 7,066 | 3,513 | 5,524 | 7,247 | 7,056 | 6835 | 5,316 |
| **ஏனையவை** | **1,081** | **1,084** | **1,074** | **1,081** | **1,250** | **3787** | **1,778** |
| **குறைச் செலவுக்கான ஒதுக்கீடு** | - | - | - | - | - | - | - |
| **மொத்த நடைமுறைச் செலவும் கடன்வழங்கலும்** | **40,841** | **40,455** | **52,810** | **45,973** | **60,544** | **51,445** | **70,996** |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்ததோடு மொத்த வருமானத்தில் 69 சதவீதத்திற்கு வகைகூறியது. இவ்வருமானங்களில் பெரும் பகுதி புரழ்வு வரி மற்றும் உரிமக் கட்டணங்களின் வடிவில் அமைந்திருந்தது. 1 சதவீதத்திற்கும் 5 சதவீதத்திற்கும் இடையில் சேகரிக்கப்பட்ட மொத்த விற்பனை வரிகள் மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்களில் இருந்தாகும். 1997 இல் மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்களின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் மொத்த விற்பனை வரி சேகரிப்புக்கள் 1996 இன் 6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1997 இல் வாகனங்களின் பதிவு மற்றும் வெறியக் குடிவகைகளுக்கான புதிய உரிமம் வழங்கல் என்பவற்றின் மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் உரிமக் கட்டண சேகரிப்புக்கள் 1996 இன் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தினால் அதிகரித்தது. 1996 ல் இருந்த உற்பத்தி மற்றும் செலவினம் சம்பந்தமான வரிவீத அமைப்பின்படி வரி அடிப்படையின் விரிவாக்கம் (வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு) ஒன்றிற்கு இட்டுச் சென்றது.

சொத்து கொடுக்கல் வாங்கல்கள் மெதுவடைந்தமையின் காரணமாக மாகாண சபைகளின் இரண்டாவது பாரிய வருமான மூலமான முத்திரை தீர்வை சேகரிப்பு 1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. பிரதானமாக சேகரிப்பு நடைமுறைகளில் காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் கட்டண அதிகரிப்புகள் போன்றவற்றினால் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதங்கள் மற்றும் கட்டணங்கள் விதிப்புக் கட்டணங்கள் உள்ளடங்கிய கட்டணங்கள் மற்றும் விதிப்புக் கட்டணங்களிலிருந்தான வருமானம் 15 சதவீதத்தினால் அதிகரித்தது.

மேல், மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாண சபைகளின் வருமானம் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் வட கிழக்கு மாகாணம் 1 சதவீதத்திற்கும் குறைவாக வகை கூறியது.

**வரைபடம் 8.4**
**மாகாண சபைகளின் செயலாற்றம் - 1997**




## செலவினங்கள்

மாகாண சபைகளின் பெரும்பாலான செலவினங்கள் (94 சதவீதம்) நடைமுறைச் செலவினங்களாகும். மூலதனச் செலவினம் 19 சதவீத பாரிய அதிகரிப்பைக் காட்டிய வேளையில் நடைமுறைச் செலவினம் 6 சதவீதத்தினால் அதிகரித்தது.

## நடைமுறைச் செலவினம்

1997 சனவரியில் இருந்து அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் தனியாள் ஊதியத்தின் (சம்பளங்கள், கூலிகள், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள், வாழ்க்கைச் செலவுப்படிகள் மற்றும் ஏனைய படிகள்) மீதான செலவினம் 5 சதவீதம் அதிகரித்தது. கல்வி (ரூ. 12,094 மில்லியன்) நலம் (ரூ. 3,054 மில்லியன்) மற்றும் பிரதேச மட்டத்திலான நிருவாகம் (ரூ. 545 மில்லியன்) போன்றவற்றிற்கான கொடுப்பனவு 1997 இல் மொத்தத் தனியாள் ஊதியங்களின் 92 சதவீதத்திற்கு வகை கூறியது. ஏனைய மீண்டெழும் செலவுகளின் வளர்ச்சி (பிரயாணம், வழங்கல், ஒப்பந்தப் பணிகள், நடைமுறை மாற்றல்கள் போன்றவை) 1996 இன் 24 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6 வீதத்தை உள்ளடக்கியிருந்தது. இது திறைசேரியினால் காசு முகாமைத்துவத்தில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான கட்டுப்பாட்டு முறையின் விளைவாகும்.

சமூகப் பணிகளின் (கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய சமூக செயற்பாடுகள்) மீண்டெழும் செலவுகள் 5 சதவீதத்தினால் உயர்ந்து 1997 இன் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 87 சதவீதத்திற்கு வகை கூறியது. பொருளாதாரப் பணிகளின் மீண்டெழும் செலவுகள் 4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 1997 இல் நிருவாகத்திற்கான செலவினங்கள் 9 சதவீத அதிகரிப்பைக் காட்டின.

மேல் மாகாண சபையின் மொத்த நடைமுறைச் செலவினம் ரூ. 5,307 மில்லியனாக அமைந்து அனைத்து மாகாண சபைகளினதும் மொத்த நடைமுறைச் செலவில் 24 சதவீதத்திற்கு வகை கூறியதோடு மத்திய மாகாண சபை (14 சதவீதம்) வடகிழக்கு மாகாண சபை (14 சதவீதம்) தென்மாகாண சபை (13 சதவீதம்) வடமேல் மாகாண சபை (12 சதவீதம்) சபரகமுவ மாகாண

**அட்டவணை 8.5**

மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிபடபாடு

ரூபா மில்லியன்

| விடயம் | 1995 | 1996 | 1997(அ) |
|---|---|---|---|
| **1. மொத்த அரசிறை** | **4,440** | **4,884** | **5,395** |
| 1.1 உற்பத்தி மற்றும் செலவினம் | | | |
| மீதான வரிகள் | 3,181 | 3,416 | 3,744 |
| புரள்வு வரிகள் | 2,335 | 2,464 | 2,734 |
| உரிமக் கட்டணங்கள் | 840 | 946 | 1,000 |
| ஏனைய வரிகள் | 6 | 6 | 10 |
| 1.2 இலாபங்களும்பங்கிலாபங்களும் | 68 | 67 | 175 |
| 1.3 விற்பனைகளும், கட்டணங்களும் | 317 | 355 | 408 |
| 1.4 முத்திரைத் தீர்வை | 867 | 1,036 | 1,051 |
| 1.5 ஏனைய | 7 | 10 | 17 |
| **2. மொத்தச் செலவினம்** | **20,852** | **22,128** | **23,455** |
| 2.1 நடைமுறைச் செலவினம் | 19,795 | 20,941 | 22,055 |
| தொழிற்பாட்டு அடிப்படையில் | 19,795 | 20,941 | 22,055 |
| மாகாண நிர்வாகம் | 2,067 | 1,942 | 1,941 |
| பொருளாதாரப் பணிகள் | 755 | 834 | 939 |
| சமூகப் பணிகள் | 16,973 | 18,166 | 19,175 |
| பொருளாதார அடிப்படையில் | 19,795 | 20,941 | 22,055 |
| தனியார் ஊதியங்கள் | 16,031 | 16,263 | 17,067 |
| ஏனைய | 3,765 | 4,679 | 4,988 |
| 2.2 மூலதனச் செலவினம் | 1,057 | 1,187 | 1,400 |
| மூலதனப் பொருட்களின் | | | |
| கையேற்பு | 594 | 757 | 729 |
| மூலதன மாற்றல்கள் | 66 | 53 | 55 |
| ஏனைய | 397 | 377 | 616 |
| **3. நிதியிடல்** | **15,288** | **16,873** | **18,348** |
| 3.1 மொத்தக் கொடைகள் | 14,066 | 15,831 | 16,855 |
| 3.2 தேர்வு அடிப்படையிலான | | | |
| கொடைகள் | 897 | 800 | 1,168 |
| 3.3குறைநிரப்புக் கொடைகள் | 325 | 242 | 325 |

(அ) தற்காலிகம். மூலங்கள்: மகாாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

சபை (9 சதவீதம்) வடமத்திய மாகாண சபை (7 சதவீதம்) மற்றும் ஊவா மாகாண சபை (7 சதவீதம்) ஆகவும் அமைந்தது.

## மூலதனச் செலவினம்

கருவிகள், அமைப்பு முறை மற்றும் காணி அபிவிருத்தி போன்றவற்றிற்கான மூலதனச் செலவினம் மொத்த மூலதனச் செலவில் ரூ. 729 மில்லியனாக அமைந்து 52 சதவீதத்திற்கு வகைகூறியதோடு 1997 இல் மாகாண சபை உறுப்பினர்களின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மூலதனச் செலவின் பெருமளவு அதிகரிப்பின் காரணமாக கடந்த ஆண்டின் 64 சதவீதத்திலிருந்து குறைந்தது. மாகாண சபைகளினால் சில மூலதனச் செயற்றிட்டங்கள் குறிப்பிட்ட அமைச்சுக்களில் இருந்து பொறுப்பேற்கப்பட்டது. இவைகளின் மொத்தப் பெறுமதி ரூ. 3047 மில்லியனாக அமைந்ததோடு இதில் நலம் (ரூ. 711 மில்லியன்) நெடுஞ்சாலைகள் (ரூ. 707 மில்லியன்) கல்வி (ரூ. 661 மில்லியன்) மற்றும் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான (ரூ. 888 மில்லியன்)பங்களிப்பு மொத்தத் தொகையில் 97 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்தியது. இதில் தென்மாகாண சபை ரூ. 917 மில்லியனைக் கொண்டு மொத்த செலவின த்தில் 30 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் ஏனைய அனைத்து மாகாண சபைகளிலும் பங்கு மொத்தத் தொகையில் 4 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. மூலதன செயற்றிட்டங்களுக்கான நிதிகள் குறிப்பிட்ட அமைச்சுக்களின் நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டது.

## 8.6 அரச தொழில்முயற்சி சீரமைப்புக்கள்

அரச தொழில்முயற்சி சீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ரூ. 22,535 மில்லியனை உழைத்து 1997 இன் அரச மொத்த பெறுவனவுகளின் 12 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்ததோடு பொதுப்படு கடனின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கும் அதன் படுகடன் பட்டியலை மறுசீரமைப்பதற்கும் அரசிற்கு இயலுமாகவிருந்தது. இது வட்டிச் செலவினைக் குறைக்க உதவிய தெனினும் வட்டிச் செலவின் தாக்கம் 1998 இலும் அதன் பின்னருமே உணரப்படும்.

வரையறுத்த இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் 35 சதவீதமான பங்கினை யப்பானின் நிப்போன் ரெலிகிராபிக் மற்றும் தொலைபேசி கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 13,274 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர்கள் 225 மில்லியன்) விற்பனை செய்தமை அரச தொழிற்முயற்சி சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பிரதான நடவடிக்கையாகும். நிப்போன் ரெலிகிராபிக் மற்றும் தொலைபேசி கூட்டுத்தாபன முகாமைத்துவ ஒப்பந்தத்துடன் இணைந்து இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் தொழிற்பாட்டு வினைத்திறன் மேம்படுத்தலை முன்னெடுத்துச் செல்லல் இன்னுமொரு அதி முக்கிய நடவடிக்கையாகும். அரசாங்கம், இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் 3.5 சதவீத பங்கினை அதன் ஊழியர்களுக்கு வழங்கவும் ஒதுக்கி வைத்துள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியில் அரசின் உடைமையாக விருந்த மாற்றக்கூடிய தொகுதிக் கடன்களின் விற்பனை மூலம் ரூ. 4500 மில்லியன் வருவாய் உருவாக்கப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கலானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தனி

**அட்டவணை 8.6**

அடையப்பட்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் 1997 (அ)

| தொழில் முயற்சியின் பெயர் | பெரும்பான்மைப் பங்குகளின் விற்பனை | | | பொதுப்பங்கு வழங்கல் | | அடையப் பட்ட மொத்தத் தொகை ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| | % அகற்றல் | உள் நாட்டு ரூபா மில்லியன் | வெளி நாட்டு ரூபா மில்லியன் | % அகற்றல் | அடையப் பட்ட தொகை ரூபா மில்லியன் | |
| **பெருந்தோட்டக் கம்பனிகள்** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட நமுனுகுல பெருந்தோட்டம் | 51 | 408 | - | - | - | 408 |
| வரையறுக்கப்பட்ட மதுரட பெருந்தோட்டம் | 51 | 467 | - | - | - | 467 |
| வரையறுக்கப்பட்ட மல்வத்தை பெருந்தோட்டம் | 51 | 622 | - | - | - | 622 |
| வரையறுக்கப்பட்ட ககவத்தை பெருந்தோட்டம் | 51 | 308 | - | - | - | 308 |
| வரையறுக்கப்பட்ட எல்பிடிய பெருந்தோட்டம் | 51 | 308 | - | - | - | 308 |
| வரையறுக்கப்பட்ட பொகவன்தலாவ பெருந்தோட்டம் | - | - | - | 19 | 141 | 141 |
| வரையறுக்கப்பட்ட கேகாலை பெருந்தோட்டம் | - | - | - | 19 | 118 | 118 |
| வரையறுக்கப்பட்ட அகலவத்தை பெருந்தோட்டம் | - | - | - | 19 | 133 | 133 |
| வரையறுக்கப்பட்ட கொரன பெருந்தோட்டம் | - | - | - | 19 | 120 | 120 |
| வரையறுக்கப்பட்ட களனி பெருந்தோட்டம் | - | - | - | 19 | 123 | 123 |
| வரையறுக்கப்பட்ட வட்டவளை பெருந்தோட்டம் | - | - | - | 20 | 60 | 60 |
| வரையறுக்கப்பட்ட மஸகெலியா பெருந்தோட்டம் | - | - | - | 20 | 60 | 60 |
| வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம் | 51 | 408 | - | - | - | 408 |
| வரையறுக்கப்பட்ட புசல்லாவை பெருந்தோட்டம் | 51 | 398 | - | - | - | 398 |
| **ஏனைய தொழில்முயற்சிகள்** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் | 90 | 453 | - | - | - | 453 |
| வரையறுக்கப்பட்ட புத்தளம் சோல்ட் | 90 | 123 | - | - | - | 123 |
| வரையறுக்கப்பட்ட லங்கா செரமிக் | - | - | - | 17 | 206 | 206 |
| வரையறுக்கப்பட்ட மத்தேகம ரெக்ஸ்ரைல்ஸ் | 100 | - | 30 | - | - | 30 |
| வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் | 35 | - | 13,380 | - | - | 13,380 |
| தேசிய அபிவிருத்தி வங்கியின் மாற்றத்தக்க தொகுதிக்கடன்களின் விற்பனை | - | - | - | 51 | 4500 | 4500 |
| **மொத்தம்** | | **3,494** | **13,410** | | **5,462** | **22,365** |

(அ) கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான தரகுக் கொடுப்பனவு மற்றும் ஏனைய பணிக் கட்டணங்கள் என்பனவற்றின் செலுத்தலின் பின்னர் உடமையகற்றல் பெறுகைகளின் தேறிய பெறுகைகளை அரச கணக்குகள் காட்டுகின்றன. அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவினூடாகப் பெறப்பட்ட பெறுகைகளை மட்டுமே அட்டவணை காட்டுகின்றது. அத்துடன் தவணைக் கொடுப்பனவுகள் திறைசேரியினால் நேரடியாகப் பெறப்படுகின்றன.

மூலம்: அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு.

அரச வழங்கலாகும். 1993 சனவரியில் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 275 மில்லியன் பெறுமதியான தேசிய அபிவிருத்தி வங்கியின் மாற்றத்தக்க தொகுதிக் கடன்களின் உரிமை அகற்றப் பட்டது. 1999, 2000 மற்றும் 2001ம் ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் மாற்றத்தக்க தொகுதிக்கடன்கள் பங்கொன்றிற்கு ரூ. 10 முகவிலையான 18.33 மில்லியன் சாதாரண பங்குகளாக மாற்றப்பட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஊடாக சந்தைக்கு வழங்கப்பட்டது. இந்த வழங்கல் உள்நாட்டுச் சந்தையினால் ஈர்த்துக் கொள்வதற்கு மிக அதிகமாக காணப்பட்டதனால் 16.5 மில்லியன் பங்குகள் வெளிநாட்டவருக்கு வழங்கப்பட்ட வேளையில் 916,667 பங்குகள் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டன. எஞ்சியிருந்த 916,666 பங்குகள் தேசிய அபிவிருத்தி வங்கியின் ஊழியர் பங்கு உடைமை உரிமைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன. பங்கொன்றிற்கான பன்னாட்டு வழங்கல் ரூ. 260 ஆக விலையிடப்பட்டதோடு பங்கொன்றிற்கான உள்நாட்டு வழங்கல் ரூ. 250 ஆக விலையிடப்பட்டது.

நீண்டகால குத்தகையின் கீழ் ஏழு பெருந்தோட்டக் கம்பனிகள் (வரையறுக்கப்பட்ட நமுனுகுல பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மத்துரட்ட பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மல்வத்தைவெலி பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட காவத்தை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட எல்பிட்டிய பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பிளான்டேசன், மற்றும் வரையறுக்கப்படட புசல்லாவ பிளான்டேசன்) ஒவ்வொன்றினதும் 51 சதவீதமான பங்குகளின்

உரிமை அகற்றல் முற்றுப்பெற்றது. இதன் மூலமான பெறுகைகள் ரூ. 2914 மில்லியன் என கணக்கிடப்பட்டது. வரையறுக்கப்பட்ட பகவந்தலாவ பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட கேகாலை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட அகலவத்தை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட ஹொரணை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட களனிவலி பிளான்டேசன் போன்ற ஐந்து பெருந்தோட்டக் கம்பனிகள் ஒவ்வொன்றினதும் 19 சதவீதமான உரிமை அகற்றலுக்கான பொதுப் பங்கு வழங்கல் 1997 இன் அரசிறைக்கு ரூ. 635 மில்லியனை பங்களிப்பு செய்தது. வரையறுக்கப்பட்ட வட்டவளை பிளான்டேசன் வரையறுக்கப்பட்ட மஸ்கேலியா பிளான்டேசன் ஆகிய ஒவ்வொன்றினதும் 20 சதவீதமான பங்குகளின் உரிமை அகற்றலுக்கான பொதுப்பங்கு வழங்கலை 1997 இல் அரச வருவாய்க்கு ரூ. 111 மில்லியனைச் சேர்த்தன.


வரையறுக்கப்பட்ட லங்கா உப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட புத்தளம் உப்பு நிறுவனங்களின் 90 சதவீதமான பங்கு விற்பனை மூலம் ரூ. 575 மில்லியன் வருவாய் உருவாக்கப்பட்ட வேளையில் வரையறுக்கப்பட்ட லங்கா செரமிக் நிறுவனத்தின் 17.33 சதவீதமான பங்குகளின் பொதுப் பங்கு வழங்கப்பட்டதன் மூலம் 1997 இல் ரூ. 206 மில்லியன் வருவாய் திரட்டப்பட்டது. செயற்பாட்டில் வெற்றியளிக்காத தனியார் மயப்படுத்தப்பட்ட அரச தொழில் முயற்சியான வரையறுக்கப்பட்ட மத்தேகம புடவை ஆலை மீண்டும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. முழு உடைமை உரிமையையும் ரூ. 29.5 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்ட காபூல் லங்கா நிறுவனத்திற்கு விற்றதன் ஊடாக மீண்டும் உடைமை மாற்றப்பட்டது. முதலீட்டாளரினால் கிட்டத்தட்ட ரூ. 1000 மில்லியன் புதிய முதலீடு உள்ளிடப்பட்டதன் மூலம் இது ஏறக்குறைய 900 வேலைவாய்ப்புக்களை வழங்கும் என்றவகையில் மறுசீரமைக்கப்பட்டு புத்தாக்கம் செய்யப்பட்டது.

## 8.7 வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையை நிதியிடல்

1997 இன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (கொடைகளின் பின்னர்) 1996 இன் ரூ. 59,914 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997 இல் ரூ. 39,997 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் (ரூ. 30,275 மில்லியன்) 1996 இன் 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் 76 சதவீதத்திற்கு நிதியளித்தது. 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்தைக் கொண்ட வங்கி நிதியிடலுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு வங்கித்தொழில் முறைமைக்கான தேறிய மீள்கொடுப்பனவுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக தேறிய உள்நாட்டு நிதியிடல் 1996 இன் 6.5 சதவீதத்திலிருந்து 1997 இல் 3.4 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

ரூ. 22,973 மில்லியனாக விளங்கிய மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் 1997 இல் 11 சதவீதமானதொரு அதிகரிப்பைக் காட்டின. ஐ.அ.டொலர்கள் 50 மில்லியன் (ரூ. 2901 மில்லியனுக்கு சமமான) மாறுபடும் வீதப் பத்திரங்கள் வழங்கலின் ஊடாக சேகரிக்கப்பட்ட கடன்பாடுகள் நீங்கலாக வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மொத்த பகிர்ந்தளிப்புக்கள் 1997 ம் ஆண்டு திட்டமிடப்பட்ட தொகையிலும் 27 சதவீதம் குறைவாகவிருந்தது. செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல்களில் குறிப்பாக துறைமுகங்கள், சக்தி மற்றும் வலுத்துறை போன்ற விடயங்களில் ஏற்படும் காலதாமதங்களும் வெளிநாட்டு நிதியினை ஈர்த்துக் கொள்வதற்கான உள்நாட்டு மூலவளப் பற்றாக்குறையும் உதவி பயன்பாட்டின் குறைப்பிற்கான பிரதான காரணங்களாகும். வெளிநாட்டுக் கடன்களின் மீதான மீள் கொடுப்பனவுகள் ரூ. 13,251 மில்லியனுக்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.1 சதவீதமாக விளங்கிய தேறிய வெளிநாட்டுக்கடன் பாடுகள் கடந்த ஆண்டின் 1.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இன் பற்றாக்குறை நிதியிடலுக்கு கிடைக்கக்கூடியதாக விருந்தது. இருபுடை மற்றும் பல்புடை மூலங்களில் இருந்து தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 9,784 மில்லியனாக விளங்கிய வேளையில் மாறுபடும் வீதப்பத்திரங்களின் வழங்கல் உட்பட ஏனைய மூலங்களின் தேறிய மீள்கொடுப்பனவுகள் ரூ. 62 மில்லியன் என அறியப்பட்டுள்ளது.

வரைபடம் 8.5
பற்றாக்குறையை நிதியிடல்



1997 இன் மொத்த செயற்றிட்ட உதவிக் கடன்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ரூ. 4499 மில்லியன்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (ரூ. 3676 மில்லியன்) மற்றும் யப்பானிய அரசாங்கம் (ரூ. 3629 மில்லியன்) ஆகியன 71 சதவீதத்தை வழங்கி யிருந்தன.

ரூபாக் கடன்களின் ஊடான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 24,154 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 33,500 மில்லிய னாக விளங்கியது. மொத்த ரூபாய்க் கடன்களில் 84 சதவீதத்திற்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன பங்களிப்பு செய்திருந்தன. திறைசேரி முறிகளின் புதிய முதலீடுகளுக்கு மேலதிகமாக 1997 இல் ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபாப் பிணைகள் மீதான தேறிய முதலீடு 6 சதவீதத்தினால் உயர்ந்து ரூ. 17,588 மில்லியனாக காணப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் ரூபாக் கடன்கள் மீதான தேறிய முதலீடு 1996 இன் ரூ. 4919 மில்லியனிலிருந்து 1997 ல் ரூ. 10,655 மில்லியனுக்கு அதிகரித்தது. தேசிய சேமிப்பு வங்கி அதன் முதலீடுகளை குறிப்பாக அரசப் பிணையங்களில் இருந்து ரூபாப் பிணையங்களுக்கு மாற்றியது.

1997 இல் மார்ச்சில் சந்தைக்கு அறிமுகப் படுத்தப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட புதிய திறைசேரி முறிகள் பிரபல்யம் வாய்ந்ததாக மாறியது. 1997 மார்ச்சு முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் திறைசேரி முறிகளின் ஊடாக அரசாங்கம் ரூ. 10,000 மில்லிய னைத் திரட்டியது இறையியல் நிலைமைகளின் முன்னேற்றம் மற்றும் மாறும் சந்தை நிலைமைகள் காரணமாக திறைசேரி முறிகளின் வட்டிவீதம் குறைவடைந்தது. இதற்கிணங்க திறைசேரி முறிகளின் நறுக்கு வீதங்கள் 14.0 சதவீதத்திலிருந்து கீழ்நோக்கி 11.5 சதவீதத்தில் திருத்தப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியம் (ரூ. 3100 மில்லியன்) மற்றும் தேசிய சேமிப்பு வங்கி (ரூ.1609 மில்லியன்) என்பவை திறைசேரி முறிகளின் 47 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்திருக்கின்ற வேளையில் எஞ்சிய தொகைகள் ஏனைய முதலீட்டாளர்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வர்த்தக வங்கிகள் திறைசேரி முறிகளில் ரூ. 1788 மில்லியனை அல்லது 18 சதவீதத்தைக் கொள்வனவு செய்துள்ளன.

தனியார்மயப்படுத்தல் பெறுகைகளின் பாரிய உட்பாய்ச்சல்கள் காரணமாக வங்கித் தொழில் முறைமைகளுடன் உயர் கடன் செலவின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு இயலுமாக இருந்த முக்கிய காரணத்தினால் 1997 இன் ஒடுங்கிய மூலவள இடைவெளியின் அரசிறைப் பக்கத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு காணப்பட்டது. மத்திய வங்கியில் வைத்திருக்கப்பட்ட தீர்க்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் ரூ 10,000 மில்லியனாக (முகப்புப் பெறுமதி) விளங்கியது. இதற்கு மேலதிக மாக இரண்டு அரச வங்கிகளுக்கான தீர்ப்பனவுகள் செய்யப்பட்டன. இத்தொழிற்பாடுகளின் தேறிய விளைவு, முன்னைய ஆண்டின் வங்கித்தொழில் முறையிலிருந்தான ரூ. 13,090 மில்லியன் தேறிய கடன்பாடுகளுடன் ஒப்பிடுகையில் 1997 இல் வங்கித்தொழில் முறைக்கு ரூ. 2,172 மில்லியனாக முழுமையான மீள்கொடுப்பனவிற்கு காரணமா கியது. மத்திய வங்கியின் ஊடான பற்றாக்குறை நிதியிடல் ரூ. 13,991 மில்லியனால் வீழ்ச்சியடை ந்ததோடு இது தொடக்க திறைசேரி உண்டியல் தீர்ப்பனவை விட பாரிய குறைப்பாக இருந்தது. சட்டநியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப் பட்டதன் ஊடாக வங்கிகள் அதிகளவான நிதியினை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ததனால் வணிக வங்கிகளில் இருந்து அரசுக்கான தேறிய கொடுகடன் ரூ. 11,618 மில்லியனாக விளங்கியது. வங்கித்தொழில் முறையில் அரசாங்கத்தின் வைப்புக்கள் மத்திய வங்கியின் ரூ. 6467 மில்லியன் மற்றும் வர்த்தக வங்கிகளில் ரூ. 13,739 மில்லியனை யும் உள்ளடக்கிய ரூ. 20,206 மில்லியனாகக் காணப்பட்டது.


## 8.8 அரச படுகடன்

1997 இன் இறுதியில் அரச படுகடன் 7 சதவீத அதிகரிப்பொன்றைப் பதிவு செய்து ரூ. 758,714 மில்லியனாக விளங்கியது. மொத்தப் படுகடன்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 1996 இன் 92 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 85 சதவீதமாக விளங்கியது. இது 1993 இலிருந்து அவதானிக்கப்பட்ட சாதகமான போக் காகும். மொத்த அரச படுகடனில் மொத்த உள் நாட்டுப் படுகடன் 50 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டுப் படுகடன் மட்டம் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மட்டம் ஆகிய ஒவ்வொன்றும் 1997 இல் முறையே 10 சதவீதத்தினாலும் 5 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

### உள்நாட்டுப் படுகடன்

திறைசேரி முறிகள் வழங்கப்பட்டதன் மூலமும் குறுகிய காலத்தில் தீர்க்கப்பட்லாம் என்ற விருப்பத்தேர்வின் அடிப்படையில் வழங்கப்பட்ட

வரைபடம் 8.6
படுகடன் உள்ளமைப்பு




ரூபாக் கடன்கள் மற்றும் குறுங்கால படுகடன் மட்டத்தில் குறைப்பு ஏற்பட்டதனாலும் கடன் அமைப்பு குறிப்பிடத்தக்க வீதத்தில் மேம்பாடடைந்தது. படுகடன் அமைப்பு அதிக நெகிழ்ச்சியுடையதாகவும் விளைவை உறுதிசெய்யும் பெருமளவு சந்தை சார்ந்ததாகவும் இது மாற்றியது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடன் 1996 இன் இறுதியின் 41 சதவீதத்திலிருந்து 1997ம் ஆண்டின் இறுதியில் 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ. 133,303 மில்லியனாக இருந்தது. குறுங்காலப் படுகடனில் திறைசேரி உண்டியல்கள் 86 சதவீதத்திற்கு வகை கூறியது. 1997 இல் திறைசேரி உண்டியல்களுக்கான வட்டிவீதங்கள் அதிகளவில் வீழ்ச்சியடைந்தன. வருட ஆரம்பத்தில் 3, 6 மற்றும் 12 மாத திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே 17.14, 17.03 மற்றும் 17.11 சதவீதம் என இருக்கையில் ஆண்டிறுதியில் இவ்வீதங்கள் முறையே 9.97,10.09 மற்றும் 10.21 என வீழ்ச்சியடைந்தன. குறுங்காலப் படுகடனின் எஞ்சிய 14 சதவீதத்திற்கு வகைகூறிய மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் 1997 இன் இறுதியில் ரூ. 18,307 மில்லியனுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தன.

நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் (நீண்டகால மீளமைப்பு முறிகளையும் உள்ளடக்கி) 21 சதவீதத்தினால் அதிகரித்து 1997 இல் மொத்த உள்நாட்டுப் படுகடனின் 65 சதவீதத்திற்கு வகைகூறியது. நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடனின் மொத்த வெளிநின்ற தொகையில் திறைசேரி முறிகள் 4 சதவீதத்திற்கு வகைகூறியது. வர்த்தக வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சேமிப்பு நிறுவனங்கள் மொத்த திறைசேரி முறிவழங்கலில் முறையே 33 சதவீதம், 32 சதவீதம், 18 சதவீதத்தினைக் கொள்வனவு செய்ததோடு 17 சதவீதம் ஏனைய அனைத்து முதலீட்டாளர்களுக்கு விடப்பட்டது. நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன் கையிருப்பின் எஞ்சியபகுதி பெரும்பாலும் ரூபாக் கடன்கள் முழுவதனையும் உள்ளடக்கியிருந்தது. அரசின் உள்நாட்டு மூலவளங்கள் தேவைப்பாடுகளின் பெரும்பகுதி ரூ. 48,500 மில்லியனாக திரட்டப்பட்ட ரூபாக் கடன்களின் ஊடாக சமாளிக்கப்பட்டது. இரண்டு தொடக்கம் எட்டு ஆண்டுகள் வரையிலான வேறுபடும் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 17 தொடர் ரூபாக் கடன்கள் 1997 இல் சந்தைக்கு விடப்பட்டது. பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து செல்லும் வகையில் குறைந்து செல்லும் நிலையில் ரூபாக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் சீர்செய்யப்பட்ட வேளையில், குறுங்காலப் படுகடன் கருவிகளைவிட சிறிதளவு கூடியதாக வழங்கும் நோக்கில் நீண்ட கால முதிர்வினைக் கொண்ட ரூபாக் கடன்களுக்கு சார்பு ரீதியில் உயர்வட்டிவீதம் வழங்கப்பட்டது. இதன்படி ஆண்டின் முதலாம் காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட ரூபாக் கடன்கள் 14.5% மான ஆண்டு வட்டியைக் கொண்டிருந்தன. ஆண்டிறுதியில் வட்டி வீதங்கள் 11.25 சதவீதமாக படிப்படியாகக் குறைந்தன. 6 முதல் 7 வருட விருப்பத் தேர்வுடைய முதிர்ச்சியினைக் கொண்ட 35 சதவீதத்திற்கு மேலான ரூபாக் கடன்கள் சந்தைக்கு வழங்கப்பட்ட வேளையில், கிட்டத்தட்ட 53 சதவீதமான வழங்கல்கள் இரண்டு முதல் நான்கு வருட முதிர்வினைக் கொண்டதாயிருந்தன. ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஊழியர் சேமலாப நிதியும் தேசிய சேமிப்பு வங்கியும் இரு பிரதான பங்குதாரர்களாக தொடர்ந்தும் இருந்தனர். இந்த இரு நிறுவனங்களும் முறையே 64 சதவீதம் மற்றும் 24 சதவீதம் பங்களிப்பு செய்திருந்தன. ரூபாக் கடன்கள் மீது ஏனையவர்களால் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ரூ. 2,454 மில்லியன்) காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் (ரூ. 1,500 மில்லியன்) துறைமுக அதிகார சபை (ரூ. 750 மில்லியன்) அரச சேவை சேமலாப நிதியம் (ரூ. 923 மில்லியன்) ஏனைய அரச நிறுவனங்கள் (ரூ. 114 மில்லியன்) போன்ற நிறுவனங்களை உள்ளடக்கி ரூ. 5,741 மில்லியனாக விளங்கின.

திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு 1996 இன் இறுதியில் இருந்த ரூ. 212 மில்லியனிலிருந்து 1997 இன் இறுதியில் ரூ. 83 மில்லியனாக வீழ்ச்சியடைந்ததோடு இது அரச படுகடன் பட்டியலில் சார்பு ரீதியில் முக்கியத்துவம் அற்றதுறையாக மாறியது. 12 மாதகால முதிர்ச்சியினையும், விளைவு வீதம் 18.06 சதவீதத்தினையும் கொண்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு இதன்மீது 3

### அட்டவணை 8.7

### வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(ஆண்டு முடிவில்)

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| **மொத்த உள்நாட்டுப் படுகடன் (அ)** | **213,685** | **249,119** | **285,759** | **349,007** | **382,962** |
| குறுகிய கால | 101,845 | 108,725 | 127,470 | 142,689 | 133,303 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 111,840 | 140,394 | 158,289 | 206,318 | 249,659 |
| படுகடன் கருவிகளின்படி | 213,685 | 249,119 | 285,759 | 349,007 | 382,962 |
| ரூபாப் பிணைகள் | 105,707 | 137,554 | 157,928 | 205,975 | 239,475 |
| திறைசேரிஉண்டியல்கள் | 97,196 | 98,896 | 113,771 | 124,996 | 114,996 |
| திறைசேரி முறிகள் | - | - | - | - | 10,000 |
| ஏனையவை | 10,782 | 12,669 | 14,060 | 18,036 | 18,491 |
| நிறுவனங்களின்படி | 213,685 | 249,119 | 285,759 | 349,007 | 382,962 |
| வங்கிகள் | 90,135 | 100,043 | 113,355 | 103,553 | 101,966 |
| மத்திய வங்கி | 16,480 | 21,345 | 28,684 | 34,807 | 24,999 |
| வர்த்தக வங்கிகள் | 73,655 | 78,698 | 84,671 | 68,746 | 76,967 |
| கடன்கரைப்பு நிதியம் | 239 | 137 | 100 | 100 | 100 |
| வங்கியல்லாத்துறை | 123,311 | 148,939 | 172,304 | 245,354 | 280,896 |
| தேசிய சேமிப்பு வங்கி | 37,767 | 46,407 | 48,406 | 47,794 | 62,498 |
| ஊழியர் சேம நிதியம் | 65,645 | 79,745 | 95,000 | 113,236 | 134,867 |
| ஏனையவை | 19,899 | 22,786 | 28,898 | 84,324 | 83,531 |
| **மொத்த வெளிநாட்டுப் படுகடன்** | **270,224** | **301,812** | **346,286** | **359,390** | **375,752** |
| செயற்றிட்டக் கடன்கள் | 216,355 | 246,075 | 286,848 | 302,666 | 320,547 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 53,869 | 55,737 | 59,438 | 56,724 | 55,205 |
| நிறுவனங்களின்படி | 270,224 | 301,812 | 346,286 | 359,390 | 375,752 |
| சலுகைக் கடன்கள் | 260,557 | 292,462 | 335,656 | 348,936 | 361,430 |
| வர்த்தகக் கடன்கள் | 9,667 | 9,350 | 10,630 | 10,454 | 14,322 |
| நாணயத்தின்படி | 270,224 | 301,812 | 346,286 | 359,390 | 375,752 |
| சி.எ.உ. | 81,467 | 95,340 | 115,537 | 130,818 | 142,733 |
| ஐ.அ.டொலர் | 66,614 | 67,546 | 72,488 | 74,623 | 83,107 |
| யென் | 73,946 | 89,291 | 101,537 | 99,868 | 98,738 |
| டியுச் மார்க் | 23,865 | 25,009 | 29,114 | 27,313 | 25,746 |
| ஏனையவை | 24,332 | 24,626 | 27,610 | 26,768 | 25,428 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் | 1,065 | 950 | 1,020 | 923 | 499 |
| மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 483,909 | 550,931 | 632,045 | 708,397 | 758,714 |
| கடன்கரைப்பு நிதியம் நீங்கலாக மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 483,589 | 550,794 | 631,945 | 708,297 | 758,614 |

(அ) முறையே 1993இலும் 1996இலும் வழங்கப்பட்ட ரூ.240,880 இலட்சம் மற்றும் ரூ.238,730 இலட்சம்கொண்ட நீண்டகால முறிகளை உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கைமத்திய வங்கி

சதவீத முத்திரைத் தீர்வையும் விதிக்கப்பட்டது. 1997 இன் இறுதியில் வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் மீதான பொறுப்பு சிறியதாக 7 மில்லியனாக மாறாமல் இருந்தது.

## வெளிநாட்டுப் படுகடன்

1997 இன் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 5 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 375,752 மில்லியனாக இருந்தது. மொத்தக் கடன்பாடுகள் ரூ. 24,406 மில்லியனாக விளங்கியது. படுகடன் மீள்கொடுப்பனவுகள் மீதான செலவினம் ரூ. 10,004 மில்லியனாக விளங்கியது. வெளிநின்ற பொறுப்பும் செலாவணி வீத மாறுபாடுகள் காரணமாக ரூ. 1,959 மில்லியனாக அதிகரித்தது.

சலுகைக்கடன்களின் மொத்த அளவு ரூ. 361,430 மில்லியனுக்கு 4 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகைப் படுகடனின் பங்கு 1996 இறுதியின் 97 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 96 சதவீதமாக சிறிதளவு குறைப்பு பதிவு செய்யப்பட்டது. இருபக்க படுகடன், சலுகைக் கடன்களில் ரூ. 188,165 மில்லியனாக விளங்கி 52 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மிகுதி ரூ. 173,265 மில்லியன் அல்லது 48 சதவீதம் பல்புடை முகவராண்மைகளுக்குப் பொறுப்பாகவிருந்தது. சலுகையற்ற படுகடன்களின் கையிருப்பில் மாறுபடும் வீதப் பத்திரங்களின் வழங்கலும் சேர்க்கப் பட்டிருந்தது.

1997 இறுதியில் செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களின் வெளிநின்ற கையிருப்பு 6 சதவீத அதிகரிப்பைக் காட்டி ரூ. 320,547 மில்லியனாக விளங்கியது. கிட்டத்தட்ட 80 சதவீதமான செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்கள் இருபக்க மற்றும் பல்பக்க மூலங்களில் இருந்து பெறப்பட்டதாகும். பண்டக் கடன்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு 1997 இல் ரூ. 1427 மில்லியனால் வீழ்ச்சிடைந்து ரூ. 53,816 மில்லியனைப் பதிவு செய்தது. புதிய கடன்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக செலாவணி வீத மாறுபாடுகள் படுகடன் கையிருப்பினை ரூ. 765 மில்லியனால் குறைத்தது. இருபுடை மூலங்களில் இருந்து (ஐக்கிய அமெரிக்கா, யப்பான், நெதர்லாந்து, ஜேர்மனி, கனடா போன்ற, பெறப்பட்ட அனைத்து பண்டக் கடன்களும் சலுகை நியதிகளில் பெறப்பட்டிருந்தன.

## அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூ. 37,272 மில்லியன் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் ரூ. 55,247 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1997 இல் ரூ. 92,519 மில்லியனாக விளங்கி ரூ. 11,256 மில்லியன் அல்லது 14 சதவீத அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. இது ரூ. 4032 மில்லியன் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பினதும் மற்றும் ரூ. 7,224 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பினதும் மொத்த விளைவாகும்.

**அட்டவணை 8.8**

**வெளிநாட்டுக் கடன்கள் மீது செலாவணி வீத மாற்றத்தின் தாக்கம் (அ)**

ரூபா மில்லியன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (ஆ) |
|---|---|---|---|---|---|
| மொத்தப் பெறுகைகள் | 16,839 | 19,384 | 24,359 | 23,992 | 24,406 |
| மீள் கொடுப்பனவுகள் | 6,984 | 7,606 | 8,477 | 8,939 | 10,004 |
| தேறிய பெறுகைகள் | 9,855 | 11,778 | 15,882 | 15,053 | 14,402 |
| செலாவணிவீதமாறுபாடு காரணமாகபொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் | 24,831 | 19,810 | 28,592 | (1,949) | 1,959 |
| காலப்பகுதியின் இறுதியில் பொறுப்பு | 270,224 | 301,812 | 346,286 | 359,390 | 375,752 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) குறிப்புகள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுமதி தின பதிவு முறையினை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தற்காலிகமானவை.

எப்படியாயினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமொன்றாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் *1996* ,ன் *10.6* சதவீதத்தில் இருந்து *1997* இல் *10.4* சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுகடன்களின் கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் *1997* இல் முறையே ரூ. *24,021* மில்லியனாகவும் மற்றும் ரூ. *13,251* மில்லியனாகவும் விளங்கின.

*1997* இல் உள்நாட்டுப் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் *15* சதவீதத்தினால் அதிகரித்து ரூ. *48,555* மில்லியனாக விளங்கியன. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதியளிப்பதில் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தில் கடுமையாக தங்கியிருத்தல் மற்றும் *1996* இன் இரண்டாம் அரைப்பகுதியில் வழங்கப்பட்ட முறிகளை மறுசீரமைப்பதற்கான செலவு என்பவற்றை பிரதிபலித்து ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு ரூ. *30,021* மில்லியனுக்கு *29* சதவீதத்தால் அதிகரித்தது. *1998* இல் அவற்றின் தாக்கம் பெருமளவு உணரப்படும் என்பதனால் திறைசேரி முறிகளின் மீதான வட்டி ரூ. *327* மில்லியனாக மட்டுமே இருந்தது. நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் *1997* இல் *29* சதவீதத்தினால் அதிகரித்தலானது அண்மைய வருடங்களில் பற்றாக்குறை நிதியிடலுக்காக உயர்வட்டி வீதத்தில் நடுத்தர கால கடன்பாடுகளில் கூடுதலாக தங்கியிருத்தலைக் குறிப்பிடுகின்றது. குறுங்கால படுகடனின் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. *18,174* மில்லியனாக விளங்கி *1* சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வீதங்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் மத்தியிலும், தீர்க்கப்பட்ட திறைசேரி உண்டியல் கையிருப்பின் நேரத்திற்கு முன்னதாக வட்டி கொடுப்பனவிற்கு மேலதிகமாக *1997* இல் அதிகமாக *3* மாத மற்றும் *6* மாத திறைசேரி உண்டியல்களின் அதிகரித்த வழங்கலின் காரணமாக வட்டிச் செலவு அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன்களின் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. *47* மில்லியனால் குறைந்து ரூ. *6,692* மில்லியனாக அமைந்தது.

**அட்டவணை 8.9**

**அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்**

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 58,938 | 63,593 | 77,663 | 81,263 | 92,519 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 27,290 | 22,671 | 36,546 | 33,240 | 37,272 |
| உள்நாட்டு | 20,327 | 15,065 | 28,069 | 22,749 | 24,021 |
| வெளிநாட்டு | 6,963 | 7,606 | 8,477 | 10,491 | 13,251 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 31,648 | 40,922 | 41,117 | 48,023 | 55,247 |
| உள்நாட்டு | 26,546 | 35,411 | 34,955 | 41,284 | 48,555 |
| குறுங்கால | 13,351 | 18,712 | 13,947 | 18,053 | 18,174 |
| நடுத்தர நீண்டகால | 13,195 | 16,699 | 21,008 | 23,231 | 30,381 |
| வெளிநாடு | 5,102 | 5,511 | 6,162 | 6,739 | 6,692 |
| வட்டி / நடைமுறைச் செலவு (%) | 30.94 | 32.20 | 26.67 | 27.42 | 29.90 |
| மொ.உ.உ.(%)/படுகடன் | 11.79 | 10.98 | 11.63 | 10.57 | 10.39 |

(ஆ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.